விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 14 சனிக்கிழமை (27.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வித சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பொதுநலவாய மாநாடு திட்டமிட்டபடி இலங்கையில்!

## அதன் தலைவர் அறிவிப்பு

பொதுநலவாய நாடுகள் மாநாட்டை இலங்கையில் நடத்தும் முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை என்று பொதுநலவாய செயலகம் அறிவித்துள்ளது. நேற்றுக் காலை நடைபெற்ற பொதுநலவாய அமைச்சர்கள் மட்டக் குழுக் கூட்டத்தில், மாநாட்டின் இடத்தை மாற்று வது குறித்து எவ்வித விவாதமும் இடம்பெறவில்லை என்று கூட்டத்திற்கு தலைமை தாங்கிய பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் திப்புமோனி தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர் 25 பேரை நாடு கடத்துகிறது ஆஸி

(கான்பரா)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு புகலிடம் கோரிச் சென்ற இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களில் 25 பேர் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிரன்டன் ஓ கொன்னர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நாடு கடத்தப்படுபவர்களிடம், அவுஸ்திரேலியாவில் தொடர்ந்து தங்கியிருக்க செல்லுபடியான விசா இல்லை. அத்துடன், சட்ட ஏற்பாடு எதுவும் இல்லை. இதன் காரணமாகவே நாடு கடத்தப்படவுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 13-ம் திகதி தொடக்கம் இதுவரை 1029 இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதில் 819 பேர் சுயவிருப்பின் பேரில் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். (எ-11)

## தமிழருக்கு தீர்வு கிடைக்கும் வரை பாதுகாப்புப் பிரச்சினை இருக்கும்

### ரணில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும்வரை பாதுகாப்பு பிரச்சினையை தீர்க்க முடியாது அத்தோடு சர்வதேச அழுத்தங்களிலிருந்தும் தப்பிக் கொள்ள முடியாது எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மீண்டும் இந்த நாட்டில் பயங்கரவாதம் உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

யாழ். ரில்ஹோ ஹோட்டலில் நேற்றுக் காலை வர்த்தக பிரதிநிதிகளை சந்தித்த பின்பு ஊடகவியலாளர்களுக்கு கருத்துக் கூறும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், (02ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் குற்றம் விசாரிக்கப்படாவிட்டால் தமிழர்கள் மீண்டும் போரிட நேரிடலாம்!

### அமெரிக்க தூதுவர் எச்சரிக்கை

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான இறுதிப் போரில் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவது தாமதப் படுத்தப்படுமாயின் இலங்கையில் தமிழ் மக்கள் மீண்டும் போர் ஒன்றில் ஈடுபட நேரிடலாம் என அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் மிச்சேல் சிசோன் தெரிவித்துள்ளார்.

இலங்கை சர்வதேச ஊடகவியளார்கள் சங்கத்தினர் கொழும்பில் நடத்திய விசேட வைபவம் ஒன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையும் அமெரிக்காவும் ஒத்துழைப்புடன் செயற்பட ஆரம்பித்த வரலாறு ஆயிரத்து 800 ஆண்டு வரையான காலகட்டம் வரை நீண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## இனவாத அரசினால் தீர்வைத் தர முடியாது

### பிரபா கணேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனவாதம் கொண்டவர். அதேவேளை எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாது என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த அவர் வலம்புரிக்கு அளித்த செய்தியில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அரசியல் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. தமிழர்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் சரியான முறையில் நடைபெறவில்லை. அரசியல் தீர்வினை இழுத்தடிப்பதற்காக புதிய பிரச்சினைகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது.

அதில் குறிப்பாக யுத்தத்திற்குப் பின்பும் மீள்குடியேற்றம் தடைப்பட்டு இருக்கிறது. இராணுவம் தமிழர்களின் காணிகளை சுவீகரித்து வருகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினை நல்லவர் என்று ஒருபோதும் சொன்னதில்லை. அவர் இனவாதம் கொண்டவர். சிங்கள மக்களின் அதிக வாக்குகளைப் பெற்றவர்களால் தமிழர்களுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியாது.

அதேவேளை, (02ஆம் பக்கம் பார்க்க)

### உறுப்பினர்களை பிடிக்கும் ரணில்

## ஐ.தே.கவுக்கு தாவினார் த.தே. கூ உறுப்பினர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உறுப்பினர்களைப் பிடிக்கும் முயற்சியில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார்.

அதன் முதற் கட்டமாக சாவகச்சேரி பிரதேச சபையின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளார்.

நேற்று ஞானம்ஸ் ஹோட்டலில் நடந்த நிகழ்வின்போது சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரானவி.எட்வின் பானியல் என்பவரே ஐக்கிய தேசியக் கட்சியுடன் (20ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டத்தை காட்டிக் கொடுக்காத சிறந்ததொரு போராளி பிரபாகரன்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் சிறந்த போராளி. அவர் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கவில்லை என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபைத் தேர்தலில் கே.பி., தயா மாஸ்டர் ஆகியோர் போட்டியிடுவது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கொண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக வசந்த பண்டார மேலும் தொரிவிக்கையில்,

கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன், தயா மாஸ்டர் போன்றோரை வட மாகாண சபைத் தேர்தலில் களமிறக்கி எப்படியாவது வெற்றி பெற வேண்டுமென நினைப்பது அரசாங்கத்தின் முட்டாள்தனத்தை வெளிப்படுத்துகின்றது.

கே.பி., தயா மாஸ்டர் ஆகியோர் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள். எனவே தமிழ் மக்கள் ஒரு போது (02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்க ஐ.தே.கட்சி முயற்சிக்க வேண்டும்!

### நல்லை ஆதீன முதல்வர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நல்லை ஆதீன குருமுதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வட மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த ஐக்கிய தேசிய கட்சித் தலைவரும் எதிர்க் (02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழருக்கு தீர்வு கிடை...

யுத்தம் முடிபிற்கு கொண்டுவரப்பட்ட பின்பு அரசாங்கம் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றி அவர்களின் காணிகளை வழங்குவதாக வாக்குறுதியளித்திருந்தது.

இவ்வாறு வாக்குறுதிகளை மறந்ததோடு காணி சுவீகரிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறும் பிரதிநிதிகள் ஊடாக வலிகாமம் பகுதியில் மீள்குடியேற்றம் செய்ய முடியும். எனவே யாரால் அதைச் செய்ய முடியுமோ அவர்களைத் தெரிவு செய்யுங்கள்.

மேலும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி மக்களை குடியேற்ற வேண்டும்.

நல்லிணக்க ஆணைக் குழுவை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விட்டால் இந்த அரசாங்கம் என்னை துரோகி என்கின்றது. நான் அதற்கெல்லாம் கவலைப்படவில்லை.

பேச்சுவார்த்தைகள் ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணுங்கள். மக்களை சொந்த இடங்களில் குடியேற்றுங்கள். மீண்டும் பயங்கரவாதம் இந்த நாட்டில் உருவாக அனுமதிக்க வேண்டாம் என்று தான் கூறி வருகின்றேன்.

நிரந்தர அரசியல் தீர்வு இன்றி பாதுகாப்பு தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்கு தீர்வுகாணவும் முடியாது சர்வதேச அழுத்தங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளவும் முடியாது என்றார். (எ-6)

# போராட்டத்தைக் காட்...

அவர்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

பிரபாகரனின்பிரிவினைவாதத்தை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அரசியல் ரீதியாக பிரபாகரனை எதிர்க்கிறோம். ஆனால் ஒரு போராளி என்ற ரீதியில் பிரபாகரன் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கவில்லை.

கே.பி., தயா மாஸ்டர் போன்றோர் பணத்துக்காக போராட்டத்தை காட்டிக் கொடுத்தவர்கள். எனவே தமிழ் மக்கள் இவர்களை ஆதரிக்கமாட்டார்கள். நிராகரிப்பார்கள்.

இத்தேர்தலில் கள்ள வாக்குகளை போட்டு எப்படியாவது வெற்றிபெற அரசாங்கம் முயற்சித்தால் அது சர்வதேச ரீதியில் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும். ஏனென்றால் இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு சர்வதேச கண்காணிப்பாளர்கள் அதிகளவில் கலந்து கொள்வார்கள். மறைமுகமான ரீதியிலும் சர்வதேச கண்காணிப்பு முடுக்கி விடப்படும்.

பொலிஸ், காணி அதிகாரங்களை இரத்து செய்துவிட்டே வடமாகாண சபைத் தேர்தல் நடத்த வேண்டும். இல்லாவிட்டால் தேர்தலை நாம் எதிர்ப்போம். அத்தோடு இத்தேர்தலை நடத்தினால் அமைச்சர்கள் சிலர் அரசை விட்டு வெளியேறுவார்கள். இதுவே அரசாங்கத்திற்கு சாவு மணியாக அமையும்.

எனவே வட மாகாண சபை தேர்தலை நடத்துவது மீண்டும் பிரிவினைவாதத்திற்கு ஊக்க மருந்து வழங்கப்படுவதாகவே அமையும். யுத்தம் முடிந்து நான்கு வருடங்கள் கழிந்த போதும் வடபகுதியில் சீனித் தொழிற்சாலையோ, சீமெந்து உற்பத்தித் தொழிற்சாலையோ அல்லது வேறெந்த தொழிற்சாலைகளோ ஆரம்பிக்கப்படவில்லை. இதுவரையில் புகையிரதப்பாதையும் போடப்படவில்லை.

இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் இல்லை. எம் மக்களது உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. எனவே தமிழ் மக்கள் அரசாங்கத்திற்கு ஒரு போதும் வாக்களிக்க மாட்டார்கள் என்றார். (எ-11)

## இயலாத அரசி...

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இயங்க முடியாத ஒரு தலைவர். அவராலும் தமிழர்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாது.

பொது எதிரணி என்பது ஒரு நகைச்சுவை நாடகம். அதனால் இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுகிறார் எனவும் தெரிவித்தார். (எ-6)

# தமிழ்க் கட்சி...

கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்த நாயக்க, ரவி கருணாயக்க, டி.எம்.சுவாமிநாதன் உள்ளிட்டவர்கள் ஆதீன குரு முதல்வரை நேற்று சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் வடக்கிலுள்ள இராணுவ பிரசனத்தால் தமிழ் மக்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும் வலிகாமம் பகுதியில் இராணுவத் தேவைக்காக தமிழ் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டிய ஆதீன முதல்வர், தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியுமெனவும் ஐக்கிய தேசிய கட்சி, தமிழ்க் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுத்து தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் தெரிவித்தார். (செ-6)


**நாய்க் குட்டிகள் விற்பனைக்கு**

ஜேர்மன் செப்பர்ட் அல்ரேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.

31 நாட்களான மிக அழகிய நாய்க் குட்டிகள்.

அல்வாய் கிழக்கு, தாமன் தோட்டம்.

தொடர்பு: 0771986316

(சி3119)



**யாழ்ப்பாணம் செல்லா சினிமா**




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

**சென்னையில் ஒரு நாள்**

10.30, 2.30, 6.30, 9.30

இன்று முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு



**வாடகைக்கு**

யாழில் தொழில் புரிபவர்களுக்கு மாதாந்த வாடகை அடிப்படையிலான அறை வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:-

பிள்ளையார் இன் ஹோட்டல்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3097)



**கார் விற்பனைக்கு**

NPKY 4213 இலக்க புதிய Maroon colour Maruti 800 AC Car விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

071 847 4739, 021 222 5255

(2470)



**சேல்ஸ்மன் தேவை**

புடைவை வியாபாரத்தில் அனுபவமும், நல்லொழுக்கமும், பண்பும் உள்ள ஆண், பெண் ஊழியர்கள் தொடர்பு கொள்ளவும்

(2472)

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**

41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.



**தேவை**

யாழில் இயங்கும் பிரபல சோடாக் கம்பனிக்கு சோடாப் பெட்டி ஏற்றி இறக்க ஆட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நேரில் வரவும்.

பிள்ளையார் இன் ஹோட்டல்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3096)



பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் உயர்தரமான பட்டப்படிப்பினை இன்றே உறுதி செய்யுங்கள்

**LL.B (UK) கற்கை நெறி**

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்

Prince City Campus இன்

EdHat IHD in Law leading to LL.B (UK)

**Batch 5 இற்கான பதிவுகள் நடைபெறுகின்றன**



- உலகத் தரம் வாய்ந்த கற்கை நெறி.
- இலங்கை மற்றும் UK பாட விதானங்களை உள்ளடக்கியது.
- யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
- இலகு தவணை கொடுப்பனவு முறை.
- இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கை திட்டங்கள்

(C 3116)

University of Wolverhampton | EDhat International | bucks new university United Kingdom

**PRINCE CITY CAMPUS**

இல. 275, மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road), யாழ்ப்பாணம். தொ.பே. :- 0214923855 Hotline : 077 077 2202


## செயலமர்வு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களில் இன்று நடத்தத் திட்டமிட்டிருந்த வலிகாமக் கல்வி வலய உடற்கல்வி பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இச் செயலமர்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார். (எ-11)


## விநாயகர் பாமாலை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஓய்வு நிலை அதிபர் பொ.கனகரத்தினத்தின் ஏழு விநாயகர் திருக்கோயில் மீது பாடப்பெற்ற விநாயகர் பாமாலை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி அழகொல்லைப்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (எ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி சித்திரம்



மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சித்திரம் (2013.04.26) வெள்ளிக்கிழமை அன்று காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மருதப்பு நாகமுத்து தம்பதியரின் மருமகளும் கந்தசாமியின் அன்பு மனைவியும் தயாளனின் அன்புத்தாயும் காலஞ்சென்ற தங்கச்சியம்மா, மற்றும் தியாகரமூர்த்தி, காலஞ்சென்றவர்களான திலகவதி, திருப்பதி, தில்லைவனம், செல்வம் மற்றும் சின்னமலர் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் தங்கரத்தினம், யோகம்மா, மகேஸ்வரி, சுப்பிரமணியம், செல்வராசா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் சுலக்சனாவின் மாமியும் அமல்ராஜ், தீபிகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (2013.04.27)சனிக்கிழமை 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

(இ)

தகவல் :
குடும்பத்தினர்

## பரமயோகி சக்திவேல்



கொல்லங்கலட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுவிட்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரமயோகி சக்திவேல் 25.04.2013 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் பரமயோகி சிவபாக்கியத்தின் புதல்வனும், நிலாந்தியின் அன்புக் கணவரும், கனகேஸ்வரி, கனகரத்தினம், பரமேஸ்வரி, அமரர் இராஜரட்ணம், இராஜேஸ்வரி, சுப்பிரமணியம், அமரர் வேல்முருகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அப்புத்துரை, விஜயமலர், அமரர் சண்முகலிங்கம், மல்லிகாதேவி, கந்தையா, நகுலேஸ்வரி, இராசமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுவிட்சர்லாந்தில் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை,
பிள்ளையார் கோவிலடி.

(2471)

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## குறை ஒரு குறையல்ல

என்னை விட யோக்கியன் இவ்வுலகில் யாரும் இல்லை சேர்'' என்றான் ஒருவர்.

அவரைவிட அயோக்கியன் வேறு யாரும் இருக்க முடியாது என்ற முடிவுக்கு நான் உடனே வந்து விட்டேன். மனிதனிடம் இருக்கும் ஒரு மிகப்பெரிய குறையே... அவனிடம் இருக்கும் குறை அவனுக்குத் தெரியாமல் போவது தான்.

ஆனால் அடுத்தவர்களிடம் இருக்கும் குறைகள் இவனுக்கும் தெளிவாகத் தெரியும்.

ஒரு ஒட்டகம் ஒரு கொக்கைப்பார்த்து கேள்வி கேட்டது. '' உன் கழுத்து ஏன் இப்படி வளைந்து போய் இருக்கிறது'' என்று நக்கலாகக் கேட்டது. பார்க்கப்போனால் ஒட்டகத்திற்கு உடம்பே வளைந்து போய் இருக்கிறது. இது போய் கொக்கை கிண்டல் செய்கிறதே!.

இன்றைய காலகட்டத்தில் மனித சுபாவமும் கிட்டத்தட்ட இப்படித்தான் இருக்கிறது.

இந்த உலகில் குறையில்லாத மனிதர்கள் எவருமே இல்லை. நாம் உட்பட ... என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு ஊரிலே செல்லப்பிராணிகளை விற்பனை செய்யும் நிலையம் இருந்தது. அங்கே நாய்... கிளி... பூனை... இப்படி நிறைய மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றை வைத்து விற்பனை செய்தார்கள்.

நாய்க்குட்டி விற்பனை செய்யும் பகுதியிலே சிறுவன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அவன் விற்பனையாளரிடம் நாய்குட்டி விலை தொடர்பாக விசாரித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் அவன் வைத்திருக்கும் பணம் 50 ரூபாவாகும் அதற்கேற்றால்போல் நாய்க்குட்டிகளைப் பார்த்தான்.

அக்கடையிலே ஒரு மூலையிலே கவனிப்பாரற்ற நிலையிலே ஒரு நாய்க்குட்டியொன்று படுத்துறங்கிக் கிடந்தது. இதை அவன் அவதானித்தான். உடனே அது அவனுக்குப் பிடித்துவிட்டது.

அந்த நாய்க்குட்டி என்ன விலை? என்று கேட்டான்.

''தம்பி ... அதற்கு ஒருகால் ஊனம்... அதனாலே அது உன்னுடன் குதித்து விளையாடவோ அல்லது ஓடவோ முடியாது என்று விற்பனையாளர் கூறினார்.

அது தெரிந்துதான் கேட்கிறேன்... விலை எவ்வளவு என்பதை மட்டும் சொல்லுங்கள் ... என்று கேட்டான்.

''தம்பி...இதற்கு கால் ஒன்று ஊனம் இதைப் போய் காசு கொடுத்து பிரியப்பட்டு வாங்குவார்களா? இலவசமாகவே தருகின்றேன் எடுத்துக் கொள்'' என்றான்.

இதைக் கேட்டதும் அந்தச் சிறுவனுக்குக் கோபம் வந்து விட்டது.

''நீங்கள் ஒன்றும் இனாமாகத் தரவேண்டாம். இதில் ஐம்பது ரூபா இருக்கிறது. வைத்துக் கொள்ளுங்கள்... முதலில் நாய்க்குட்டியைக் கொடுங்கள்'' என்று சிறுவன் கூறினான்.

''சரி'' என்று பணத்தை வாங்கிக்கொண்டு நாய்க்குட்டியைத் தூக்கிக்கொடுத்தான். அவன் அதை இரு கைகளாலும் வாங்கிக்கொண்டு தனது மார்போடு அணைத்தபடி நொண்டி நொண்டி நடந்து போனான். ஆமாம் அவனுக்கும் ஒருகால் ஊனம் என்பது அப்போது தான் தெரியவந்தது.

அந்த நாய்க்குட்டியை யாருமே வாங்கமாட்டார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தபோது குறைபாடுடைய அதற்கு ஒரு எஜமானன் கிடைத்துள்ளான்.

அதனாலே ஊனம் ஒரு குறையல்ல என்ற உண்மையை அந்த விற்பனையாளர் புரிந்து கொண்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழர்களுக்கென ஒருகாலம் நிச்சயம் கனியும் நம்புங்கள்

## *நினைவுப்பேருரையில் அமைச்சர் ஹக்கீம்*

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவிற்கு பின்னர் தமிழ்த் தரப்பில் ஏற்பட்ட அரசியல் பேதமையே ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் விபாது என்ற நம்பிக்கை எமக்குண்டு.

தமிழர்களுக்கு என நிச்சயம் சரியானதொரு சந்தர்ப்பம் வரும். அது நீண்ட தொலைவில் இல்லை என நம்புகின்றேன் என நீதியமைச்சர் ரவூக் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாவின் நினைவு நிகழ்வு நேற்று தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தந்தை செல்வா பற்றிய நினைவுப்பேருரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் ,

நாம் அனைவரும் தற்போது சூழ்நிலை கைதிகளாக உள்ளோம். அதனால்தான் சில முடிபுகளை சூழ்நிலை கருதி எடுக்க வேண்டியுள்ளது.

முடிவொன்றினை எடுக்கும் போது எந்த முடிபும் சரியான சந்தர்ப்பத்தில் சரியான முடிவாக எடுக்கப்படல் வேண்டும். பிழையான சந்தர்ப்பத்தில் எடுக்கப்படும் ஒரு சரியான முடிவும் பிழையான முடிவாகவே இருக்கும்.

கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி அமைக்கவில்லை என பரவலாக பேசப்பட்டு வருகின்றது.

இதற்கு என்னால் ஒன்றை மட்டும்தான் கூறமுடியும். அதாவது நாங்கள் எல்லாம் தற்போது சூழ்நிலை கைதிகளாகவுள்ள அதே நேரம் முடிபுகள் சரியாக எடுக்கப்படல் வேண்டும்.

நாம் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே இன்று தெற்கில் வியாபித்துள்ள யுத்தத்திற்கு பின்னரான ஒருவிதமான வெற்றி களிப்புடனான மோசமான அரசியல் பின்னணியில் முஸ்லிம் சமூகம் ஆற அமர இருந்து சரியான முடிவினை சரியான சந்தர்ப்பத்தில் தான் எடுத்திருந்தது.

எனினும் எமக்கு நிச்சயம் ஒரு சரியான சந்தர்ப்பம் வரும். அது நீண்ட தொலைவில் இல்லை என எனக்கு நம்பிக்கையுண்டு. எனக்கு கிடைத்த அஞ்சலி நினைவுப் பேருரைகளில் தந்தை செல்வாவின் நினைவுப் பேருரை சந்தர்ப்பத்தை பெரும் பேறாகவே கருதுகின்றேன்.

தந்தை ,பெரியார் என்ற அடைமொழிகளுடன் யாரையும் அழைத்தது கிடையாது. ஆனால் எமது செல்வாவை தமிழ்த் தேசியத்தின் தலைவனாக, தானைத் தளபதியாக தமிழ் பேசும் சமூகங்களின் தனிப்பெரும் தலைவராக நாங்கள் பார்க்கின்றோம்.

தமிழ்த் தேசியத்திற்காக உழைத்த தந்தை செல்வா, அமிர்தலிங்கம் போன்ற பெரியார்களின் வழித்தடத்தினை பின்பற்றி செல்வதன் மூலம் எமக்கு தீர்வினை பெற்றுவிட முடியும்.

1983 ,1990 களில் நடைபெற்ற சம்பவங்கள் , முஸ்லிம் –தமிழ் மக்களிடையே விரிசலை ஏற்படுத்தியிருந்தது. அதனை தற்போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பே இல்லாதொழிக்க முயல வேண்டும்.

அண்மைக்காலமாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடைய பேச்சுக்கள் அர்த்தமுள்ளதாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் உள்ளன. ஆனால் அவைவெறும் உதட்டளவில் பேச்சுக்களாக மட்டுமில்லாமல் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும்.

இறுதியாக நான் சொல்ல விரும்புவது தந்தை செல்வாவின் இறுதி ஊர்வலத்தில் கட்டப்பட்டிருந்த பதாகை ஒன்று சொல்கின்ற செய்தி இன்றும் உண்மையாய் தெரிகின்றது.

**உத்தமனர் ஊர்வலத்தில் உயிரோடு போகின்றார்; தந்தை உயிரோடு போகின்றார்; செத்தவராய் நாமெல்லாம் வீதியிலே நிற்கின்றோம்** என தனது ஒரு மணித்தியால நினைவுப் பேருரையை முடித்துக் கொண்டார். (அ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-140 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 120 |
| தக்காளி | 60 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 |
| கோவா | 60 | 50 | 80 |
| கரட் | 120 | 120 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 180 | 120-170 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 65 | 90 | 80 |
| பாகற்காய் | 200 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 170 | 160 | 120 |
| லீக்ஸ் | 160 | 80-90 | 160 |
| பீற்றூட் | 60 | 30 | 80 |
| கறிமிளகாய் | 100 | 60 | 120 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 600 |
| போஞ்சி | -- | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 20-30 | 30 |
| தேசிக்காய் | 100 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 |

## இராசி பலன்

*27.04.2013*
*(சித்திரை 14, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*துதியை முன்னிரவு 10.02 மணிவரை*
*விசாகம் பிற்பகல் 2.53 மணிவரை*
*இராகுகாலம் 8.59-10.29 மணிவரை*
*சுபநேரம் 2.59-4.29 மணிவரை*

**மேடம்** மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய நாள், தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்து செல்வது நல்லது,

**இடபம்** நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் சிறப்புக்கள் ஏற்படும், களஸ்திர நன்மையுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காண்பீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும்.

**கடகம்** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள், கல்வி நலன் கருதி சில செலவுகள் ஏற்படலாம்.

**சிங்கம்** தாயின் உடல் நலம் சீராகும், தொலைபேசி வழித் தகவல் சந்தோசத்தை தரும், பிரயாணங்களால் நன்மையுண்டு, சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** நீண்ட நாளைய பிணக்குகளில் சில திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், உறவினர் உதவி செய்ய முன்வருவர்.

**துலாம்** உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**விருச்சிகம்** பண வரவு திருப்தி தரும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், செய்தொழில் மேன்மையுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், தாராளமாக செலவு செய்து மகிழ் வீர்கள், சயன சுகக் குறைவான நாள், குல தெய்வ வழிபாட்டை நிறை வேற்றும் எண்ணம் மேலோங்கும், மனச்சஞ்சலங்கள் தீர பொறு மையாக இருப்பது நல்லது.

**மகரம்** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் சரியாக நடைபெற்று மகிழ்ச்சி தரும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன நன்மையுண்டு.


**கும்பம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எதிர்கால முன்னேற்றம் கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** அன்பால் சாதித்து காட்டும் நாள், உறவினர்களை அனுசரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள், அரை குறையில் இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை காப்புறுதி சங்கத்தின் தலைவராக பிரகாஷ் ஷாப்டர் தெரிவு



இலங்கை காப்புறுதி சங்கத்தின் தலைவராக, ஜனசக்தி இன்சூரன்ஸ்பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரான பிரகாஷ் ஷாப்ட்டர் தெரிவு செய்யப்பட்டார்.

அண்மையில் இடம்பெற்ற காப்புறுதி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன், புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரகாஷ் ஷாப்ட்டர், இலங்கை காப்புறுதித் துறையின் தந்தை என வர்ணிக்கப்படும் சி.டி.ஏ ஷாப்பட்டர் அவர்களின் சிரேஷ்ட புதல்வர். இவர் ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் செயற்பாடுகளை 2006 -ம் ஆண்டு முதல் பொறுப்பேற்று முன்னெடுத்து வருகின்றார்.

இவர் பொறுப்பேற்கும்போது, நிறுவனத்தின் வர்த்தகப் பெறுமதி 4 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது.

இன்று இந்த பெறுமதி 8 பில்லியன் ரூபாயை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காப்புறுதி துறையில் 25 வருட கால முன் அனுபவத்தைக் கொண்டுள்ள இவர், 1994ஆம் ஆண்டு ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் நிறுவப்பட்டது முதல் நிறுவனத்தில் முக்கிய பங்கை வகித்து வருகின்றார்.

பட்டய காப்புறுதி கல்வியகத்தின் அங்கத்தவரான இவர், லண்டன் பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞான கற்கையை பூர்த்தி செய்துள்ளதுடன், பிரித்தானியாவின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் MBA பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இலங்கை காப்புறுதி சம்மேளனத்தின் முன்னாள் பதில் தலைவராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

தலைவராக பொறுப்பேற்ற பிரகாஷ் ஷாப்டர் கருத்து வெளியிடுகையில்,

எமது பிரதான சவால் என்பது ஆயுள் காப்புறுதி தொடர்பாக பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே ஆகும்.

எமது ஆயுள் காப்புறுதி அளவு மொத்த சனத்தொகையின் 11 வீதமாக அமைந்துள்ளது. இதன் காரணமாக மக்கள் மத்தியில் பெருளவு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தகவல்களை வழங்கும் நடவடிக்கைகளை பிராந்திய ரீதியில் முன்னெடுக்க வேண்டும்.

இந்தியாவில் இந்நிலை மிகவும் முன்னேற்றம் கண்டதாக காணப்படுகிறது. மொத்த தேசிய உற்பத்திக்கு நிகரான காப்புறுதி 4 வீதம் ஆக அமைந்துள்ளது. இந்த பெறுமதி அபிவிருத்தியடைந்த சந்தைகளில் மொத்த தேசிய உற்பத்தியில் 6-9 வீதமாக அமைந்திருக்கும்.

இலங்கையில் 2011 ஆம் ஆண்டில் ஆயுள் மற்றும் பொது காப்புறுதிகளின் அளவு மொத்த தேசிய உற்பத்தியில் 1.2 வீதமாக அமைந்திருந்தது.

ஆயுள் காப்புறுதி மட்டும் 2011 ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியில் 0.54 வீதமாக அமைந்திருந்தது. நான் காப்புறுதி துறையின் மிகவும் முக்கியமான நிலைக்கு நியமிக்கப்பட்டுள்ளளேன் என்பதை நன்கு அறிவேன்.

என் மீது கொண்டுள்ள நம்பிக்கையையிட்டு நான் பெருமையடைவதுடன் காப்புறுதி சம்மேளனம் மற்றும் காப்புறுதி சபை போன்றவற்றின் அர்ப்பணிப்பான குழுவினரின் உறுதி செயற்பாடுகளுக்கு வலுச் சேர்க்கும் என்றார்.

பிரகாஷ் ஷாப்டர் தமிழ் யூனியன் கிரிக்கெட் சங்கத்தின் முன்னாள் தலைவர் என்பதுடன் பல ஆண்டுகள் செயலாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார்.

இதேவேளை, இலங்கை காப்புறுதி சம்மேளனத்தின் புதிய நிர்வாக அங்கத்தவர்களாக டேர்க் பெரேரா (பதில் தலைவர்), மொஹான் டி அல்விஸ் (செயலாளர்) மற்றும் தீப்தி லொகு ஆராச்சி (பொருளாளர்) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## தொழிற்துறைகளின் உற்பத்தி செலவினம் 20-30 வீதத்தால் அதிகரிக்கும்

அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டிருக்கும் மின்சாரக் கட்டண பட்டியல் அதிகரிப்பை தொடர்ந்து, வெவ்வேறு தொழில்துறைகளின் உற்பத்தி செலவினம் 20-30 வீதத்தால் அதிகரிக்கும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் எதிர்வு கூறியுள்ளது.

இது போன்றதொரு கட்டண உயர்வை வர்த்தக நிறுவனங்களுக்கு தாங்கிக் கொள்வது என்பது மிகவும் கடினமான காரியமாக அமைந்துள்ளது.

இதன் காரணமாக நிறுவனங்களின் இலாபத்தில் பாரிய தாக்கம் ஏற்படும்.

ஏற்றுமதிக்காக பொருட்கள் மற்றும் சேவைகளில் ஈடுபடும் நிறுவனங்களை இந்தக் கட்டண உயர்வு பெருமளவு பாதிக்கும்.

ஏனெனில் இந்த நிறுவனங் கள் வெளிநாடுகளில் இருந்து பெருமளவு போட்டிகர சூழலையும் சவால்களையும் எதிர்நோக்கியுள்ளன என இலங்கை வர்த்தக சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

## ஹேலீஸின் புதிய கிளை யாழில் திறப்பு

ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் நிறுவனத்தின் புதிய கிளை கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கோண்டாவில் வீதியிலுள்ள விவசாய திணைக்களத்திற்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டது.

இக்கிளையினை ஹேலீஸ் நிறுவனத்தின் நிர்வாக முகாமையாளர் ரிஸ்வி சயீட் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

1878ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 145 வருடங்களுக்கு மேலாக தனது சேவையினை மேற்கொண்டுள்ள ஹேலீஸ் நிறுவனம், வட மாகாண விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் வட மாகாணத்தில் யாழில் இக் கிளையை ஆரம்பித்துள்ளது.




## தே.நிறுவனங்களின் வருமானம் அதிகரிப்பின் இலங்கையின் சேமிப்பு விகிதம் அதிகரிக்கும் - மத்திய வங்கி பதில் ஆளுநர்

இலங்கையில் தேசிய நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ள பெருமளவான நட்டங்கள் சீர் செய்யப்பட்டு, அவை இலாபம் ஈட்டும் பட்சத்தில் இலங்கையின் சேமிப்பு விகிதம் அதிகரிக்கும் என மத்திய வங்கியின் பதில் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார் துறையைப் பொறுத்தமட்டில் சேமிப்பு விகிதம் பெருமளவு அதிகமாக காணப்பட்ட போதிலும், பொதுத்துறையின் பிரதான நிறுவனங்களான மின்சார சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் போக்குவரத்து சபை போன்றன எதிர்நோக்கியுள்ள நட்டங்களின் காரணமாக இலங்கையின் சேமிப்பு விகிதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் தனியார் துறையின் பெறுபேறுகளை வேறாக அளப்பதற்காக நடவடிக்கைகளை தாம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,882.25 | 5,962.17 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,336.12 | 3,359.36 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,913.532 |

அதிகரித்தவை: சிலோன் லெதர்(ஹ)(5.00), சிலோன் பிறிண்டேர்ஸ் (1479.90), சிலோன் லெதர்(ஹ)(5.20), ரச்வூட்( 7.70), இன்டஸ்ரியல் அஸ்ப்(268.80).

வீழ்ச்சியடைந்தவை: ரன்ஜின்(70.00), பிமுத் பினான்ஸ்(16.30), செலின்ஜிங்(1200.00), ஆர்பிகோ(89.00), ஒனாலே(48.20).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு இன்று

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் யாழ்ப்பாணக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெறும் பங்குச் சந்தை முதலீட்டாளர்களுக்கான முழு நாள் பயிற்சிப் பட்டறை இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை-யாழ்ப்பாணம் மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளஇக்கருத்தரங்கில்,

பங்கு முதலீடு பற்றிய அறிமுகம், நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல், பங்குகளைத் தெரிவு செய்தலும் தீர்மானமெடுத்தலும், பங்குகளில் முதலீடு செய்தல் போன்ற விரிபரப்புகளில் வளவாளர்களால் விளக்கங்கள் அளிக்கப்படும்.

இதில் கலந்து கொள்ள விரும்புவர்கள் இதற்கான பதிவுக் கண்டனமாக 500 ரூபாயை மண்டப வாயிலிலேயே செலுத்தி கலந்து கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# மோட்டார் வாகனப் பதிவில் வீழ்ச்சி!

மோட்டார் வாகனங்களின் பதிவு வீழ்ச்சியடைந்துள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர்திணைக்களம்தெரிவித்துள்ளது.

கடந்த 6 மாதங்களில் வாகனங்களின் பதிவு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிஸ் சந்திர குறிப்பிட்டார்.

சாதாரணமாக மாதமொன்றுக்கு 28,000 வாகனங்கள் பதியப்பட்டுள்ளன. வாகனப் பதிவு வீழ்ச்சியடைவதற்கு முன்னர் மாதாந்தம் 45,000 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கூறினார்.

தற்போது நாட்டில் சுமார் 50 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் 35 இலட்சம் வாகனங்கள் போக்குவரத்தில்ஈடுபடுவதாக அவர்மேலும் தெரிவித்தார்.

# வளர்ச்சிப் பாதையில் வங்கியல்லா நிதி நிறுவனங்கள்

அண்மைக் காலத்தில் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் வளர்ச்சிப் போக்கு அதிகரித்துள்ளதாக இலங்கைமத்தியவங்கிதெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இத்தகைய நிதிநிறுவனங்களின் பங்களிப்பு முக்கியமானதாக அமையப் பெற்றுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் புதிய நிதி நிறுவனங்கள் திறக்கப்பட்டுள்ளதுடன், கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் துரிதவளர்ச்சியைபதிவுசெய்துள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்துவதில் இந்த நிதிநிறுவனங்களின்பங்களிப்புஇன்றியமையாததாக காணப்படுகின்றது.

# 2012 யூலைக்கு பின்னர் மசகு எண்ணெய் 100 டொலரினுள் சரிவு

கடந்த வார இறுதியில், கடந்த ஒன்பது மாத காலப்பகுதியில் முதல் தடவையாக மசகு எண்ணெயின் விலை 100 அமெரிக்க டொலர்களை விடக் குறைந்து காணப்பட்டது.

சீனா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்தான கேள்வி குறைவடைந்ததைத் தொடர்ந்து இந்த விலைச் சரிவு காணப்பட்டதாக சந்தை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யூன் மாதத்துக்கான விநியோகத்துக்கான மசகு எண்ணெயின் விலை வார இறுதியில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொழுது, பீப்பாய் ஒன்று 98 அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது. ஆயினும் இந்த விலை பின்னர் சற்று அதிகரித்து 99.53 அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது.

உலகின் 2-வது அதிகளவு எண்ணெய் பாவனை நாடான சீனா, பொருளாதார வளர்ச்சியை மந்த கதியில் எதிர்நோக்கியுள்ள நிலையில், கடந்த 3 மாத காலப் பகுதியில் எரிபொருளுக்கான தனது கேள்வியை குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதுபோன்று அமெரிக்காவின் பெருளாதார நிலையும் எதிர்பாக்கப்பட்டதைவிட மந்த கதியிலேயே முன்னேற்றம் கண்டு வருவதால் உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 125.35 | 128.41 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 193.34 | 198.97 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 162.60 | 168.03 |
| சுவிஸ் பிராங் | 131.98 | 137.04 |
| கனேடிய டொலர் | 122.29 | 126.72 |
| அவுஸ்திரேலிய டொலர் | 128.55 | 133.49 |
| சிங்கப்பூர் டொலர் | 100.84 | 104.35 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.34 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.51 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்லறைக்கு பதிலாக தின்பண்டங்கள்

(மல்லாவி)

வன்னி மாவட்டத்தில சில்லறைக்காசு தட்டுப்பாடு காரணமாக பொருட்கள் வாங்கிய பின்னர் மீதிப் பணத்திற்கு பதிலாக தின்பண்டங்களை வர்த்தகர்கள் வழங்குவதோடு பேருந்து நடத்துநர்கள் மீதிப் பணத்தை பயணிகளுக்கு கொடுக்காமலே செல்கின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவது, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நிலவிய சில்லறைத் தட்டுப்பாடானது கடந்த மாதமளவில் ஓரளவு நீங்கியிருந்தது . ஆனால் தற்போது மீண்டும் வர்த்தகர்கள் மக்கள் விரும்பாமலே சில்லறைக்காசுக்கு பதிலாக வேறு பொருட்களை வழங்குகின்றனர்.

எனவே இதனை கருத்தில் எடுத்து ஆலயங்கள் தமது கையிருப்பில் உள்ள காணிக்கைக்கான சில்லறை நாணயங்களை வர்த்தக நிலையங்களுக்கு வழங்கி உதவினால் இப்பிரச்சனையைத் தீர்க்கக் கூடியதாக இருக்கும் என மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-3-15)

# மின்சார கட்டண உயர்வுக்கு ஐ.தே.க தான் முழுக்காரணம்

## குற்றம் சுமத்துகிறது அரசாங்கம்

(கொழும்பு)

**சர்வதேச நிதி நிறுவனங்களின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு தனியார் துறையிடமிருந்து கூடுதல் விலைக்கு மின்சாரம் கொள்வனவு செய்வதற்கு 1993 ஐ.தே.க ஆட்சியில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதனால் மின்சார சபை இன்றும் நட்டத்தை சுமப்பதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், மின் கட்டண உயர்வு தொடர்பான விவகாரத்தை அரசியல் பிரச்சினையாக்க சிலர் முயற்சி செய்கின்றனர். ஆனால் கடந்த 2 வருடங்களாக இந்தப் பிரச்சினை குறித்து அரசாங்கம் ஆராய்ந்தது. மின்சார சபைக்கு கூடுதல் நட்டம் ஏற்பட்டு வரும் நிலையில் மின்வெட்டை அமுல்படுத்துவதா? அல்லது கட்டணத்தை உயர்த்துவதா? என ஆராயப்பட்டது.

வலய நாடுகளில் 8 மணி நேர மின்வெட்டு அமுலாகும் நிலையில் மின்வெட்டை அமுல்படுத்தாது கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் முடிவு செய்தது. இதற்கு மின்சக்தி அமைச்சர்கள் எவரும் பொறுப்பல்ல. அரசாங்கம் ஏகமானதாக எடுத்த முடிவின் படியே கட்டணம் உயர்த்தப்பட்டது.

இது தொடர்பில் முன்னாள் மின்சக்தி அமைச்சரும் தற்போதைய மின்சக்தி அமைச்சரும் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கிறேன். தற்காலிகமாகவே கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஜனவரி வரை இந்தக் கட்டண உயர்வில் மாற்றம் செய்யப்படமாட்டாது. ஒக்டோபரிலும் டிசம்பரிலும் மேலும் 600 மொகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைவதோடு மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

இவற்றில் சில ஒப்பந்தங்கள் இந்த வருடத்திலும் முடிவடைகின்றன. அடுத்த வருடமாகும் போது குறிப்பிட்டளவு ஒப்பந்தங்கள் குறைக்கப்பட்டு எரிபொருள் மூலம் மின் உற்பத்திகள் மட்டுப்படுத்தப்படும், அனல் மின் உற்பத்திகள் மேலும் அதிகரிக்கப்படும்.

இந்த ஒப்பந்தங்களுக்கு கட்டுப்படாமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேல் கொத்மலை மற்றும் நுரைச்சோலை மின் திட்டங்களை ஆரம்பித்தார். 4 வருடங்களில் சம்பூர் அனல் மின் நிலையத்தின் ஊடாக 500 மெகா வோர்ட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

தனியார் துறையிடமிருந்து 25 ரூபா முதல்45 ரூபா வரை கூடுதல் விலைக்கு மின்சாரம் கொள்வனவு செய்யப்படுவதால் மின்சார சபை தொடர்ந்து நட்டம் அடைந்து வருகிறது.

யாரோ செய்த பாவத்தின் பழியை நாம் சுமக்கின்றோம். மின் கட்டண உயர்வு தொடர்பில் தனிநபர் எவர் மீதும் குற்றஞ் சுமத்த முடியாது. அரசாங்கமே இது தொடர்பில் முடிவு எடுத்தது என்றார். (அ-2)

# வடக்கு மாகாண தேர்தல் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

வடமாகாணத்தில் உள்ள வாக்காளர்[illegible]க்கு தேர்தல்கள் குறித்து தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை பவ்ரல் அமைப்பு மேற்கொண்டு வருவதாக அவ்வமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தை முழுமையாக உள்ளடக்கும் வாக்காளர்களுக்கு தற்போது தமது அமைப்பு தேர்தல் தொடர்பான விளக்கமளிப்புக்களையும் தெளிவூட்டல்களையும் மேற்கொண்டு வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 20 வருடங்களின் பின்னர் வடமாகாணத்தில் தேசிய தேர்தல் ஒன்று நடைபெறவுள்ள நிலையில், மக்களுக்கு வாக்களிப்பு முறைகள் குறித்து தெளிவுபடுத்த வேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# ஐ.தே.க. எம்.பி. ரஞ்சன் மீது ஆளும் கட்சியினர் தாக்குதல்

## பிரதான எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மீது ஆளும் கட்சியினர் தாக்குதல் நடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய போது பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மீது அரசாங்க தரப்பினர் தாக்குதல் நடத்தியதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

மின்சார கட்டண அதிகரிப்பை எதிர்த்து கடந்த புதன்கிழமை ஐக்கிய தேசிய கட்சி மெழுகுவர்த்தி ஏந்தி போராட்டம் நடத்தியது. இதன்போது அரசாங்க தரப்பு உறுப்பினர்கள் ரஞ்சன் ராமநாயக்க மீது போத்தல்களை வீசி தாக்குதல் நடத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் , மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிராக தொடர்ந்து பாராளுமன்றத்திலும், பாராளுமன்றத்துக்கு வெளியிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார். (அ-2)

# வடக்கில் அதிவேக ரயில் பாதையை அமைத்து வருகின்றது இந்தியா

வடபகுதியில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் புகையிரத பாதைகள் மணிக்கு 120 கிலோ மீற்றர் என்ற வேகத்தில் செல்லத் தக்கதாக வடிவமைக்கப்பட்டுள்ளதாக அந்த வேலைத் திட்டத்தின் முகாமையாளர் எஸ்.எல். குப்தா ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு இந்த தகவலை வழங்கியுள்ளார்.

மதவாச்சியில் இருந்து மன்னார் வரையான 43 கிலோ மீற்றர் புகையிரத பாதை பூர்த்தி அடைந்துள்ளது. இந்த பாதையின் சோதனை பணிகள் கடந்த புதன் கிழமை மேற்கொள்ளப்பட்டன.

இதன்படி குறித்த புகையிரத பாதையில் மணிக்கு 120 கிலோ மீற்றர் என்ற வேகத்தில் புகையிரதங்கள் பயணிக்கலாம் என்று அவர் உறுதியளித்துள்ளார்.

252 கிலோ மீற்றர் நீளமான ரயில் பாதையை நிர்மாணிப்பதற்காக இந்திய அரசாங்கம் 800 மில்லியன் அமெரிக்கா டொலர்களை வழங்கியுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## அறிவித்தல்

***இலங்கை ஆசிரியர் சேவை மற்றும் சாரதிகள் சேவை ஆகியவற்றின் வெற்றிடங்களுக்காக நடாத்தப்படும் ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை– வடக்கு மாகாணசபை.வ***

மேற்படி பரீட்சைகள் எதிர்வரும் 05.05.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்தப்பட உள்ளன. இப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இப் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து 30.04.2013 வரையில் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் 01.05.2013 திகதியின் பின் 0212219981, 0212219980 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**க.தெய்வேந்திரம்**
**செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**

(சி/3114)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>உயரம்: 5'10"<br>கி.பா: 56, 1இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L (ஜேர்மன் PR)<br>தொ.இ: B -1686 | பிறப்பு: 1963 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>உயரம்: 5'5"<br>கி.பா:18.5<br>தொ.இ: G -1706 |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>உயரம்: 5'3"<br>கி.பா: 20.5<br>தகைமை/தொழில்: A/L முன்னாள் PHA<br>தொ.இ: B -1690 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>உயரம் : 5'<br>கி.பா:40, 4இல் செவ்.<br>தகைமை/ தொழில்: BA சைவபோசனம்<br>தொ.இ: G-1710 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>உயரம்: 5'6"<br>கி.பா:23.5, 1 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: A/L, ஹோட்டல் மேற்பார்வையாளர்<br>தொ.இ: B -1691 | பிறப்பு: 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 145 cm<br>கி.பா:24, 2 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BA ஆசிரியர்<br>தொ.இ: G -1711 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'6"<br>கி.பா: 52<br>தகைமை/தொழில்: BSc (QS) கட்டார்<br>தொ.இ: B -1692 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>உயரம்: 5'7"<br>கி.பா: 51<br>தகைமை/ தொழில்: CIMA ஆசிரியர்<br>தொ.இ: G -1714 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தபால் ஊழியர் மீது தாக்குதல்

(கரவெட்டி)

தபால் ஊழியரின் வீட்டினுள் புகுந்து இரு நபர்கள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் ஊழியர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் இடம்பெற்றுள்ளது.


சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது,

குடத்தனை பகுதியில் தபால் விநியோகத்தை மேற்கொண்டு வரும் மேற்படி ஊழியரை அவரது உறவினர் வீட்டில் வைத்து குறித்த இரு நபர்களும் திடீரென காரணம் எதுவுமின்றி மண் அள்ளும் சவளியினால் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் குடத்தனை கிழக்கைச் சேர்ந்த குகதாஸ் முகுந்தன் (வயது 34) என்ற தபால் ஊழியரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-3-24)




நன்றி: மிரர்

## பொற்பதி கடற்கரையில் திருட்டுச் சம்பவம்

(கரணவாய்)

குடத்தனை பொற்பதி கடற்கரைப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த ஐந்து வெளியிணைப்பு இயந்திரங்களின் (பான்) மின் காற்றாடி திருடர்களால் அபகரித்து செல்லப்பட்டுள்ளது.


இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, கடற்றொழிலுக்கு சென்று விட்டு கொண்டு வந்து வைத்த வெளியிணைப்பு இயந்திரத்தின் (பான்) மின் காற்றாடி மீண்டும் தொழிலுக்குச் செல்வதற்கு சென்று பார்த்த போதே திருடப்பட்ட விடயம் தெரிய வந்துள்ளது.

திருடப்பட்ட மின் காற்றாடி உரிமையாளர்களின் வீடு ஒரு மைல் தூரத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-3-60)

# பிரதான எதிர்க்கட்சி பிரதிநிதிகள் பல தரப்பினரையும் சந்தித்தனர்





(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு வடக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்று பல்வேறு தரப்பினருடன் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

முன்னதாக யாழ்.நாக விகாரைக்குச் சென்ற அக்குழுவினர் நாக விகார அதிபதி விமல ரத்தின தேரரை சந்தித்து கலந்துரையாடினர். பின்பு யாழ்.ரில்ஹோ விருந்தினர் விடுதியில் வர்த்தகக் குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன் பின்பு யாழ்.ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்த ஐ.தே.க. குழுவினர் அங்கு அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசத்தைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

அதன் பிற்பாடு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஞானதேசிகர் சுவாமிகளை ஆதீனத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்தச் சந்திப்புக்களின்போது வடக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்தும் வடக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ காணி அபகரிப்பு குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு வடக்கின் தற்போதைய நிலவரம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்குடன் விஜயம் மேற்கொண்ட ஐ.தே.க வினர் பிரசார நடவடிக்கைகளுடன் விளையாட்டுப் போட்டிகளை ரசிப்பதிலும் திருமண வீட்டுக்குச் செல்வதிலும் அதிக ஈடுபாடு காட்டியிருந்தனர்.

மேலும் வடக்கில் இடம்பெறும் தமிழ் மக்களின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவது தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதற்காக தகவல் திரட்டி வருவதாகவும் குறிப்பிட்டனர். (அ-6)

## ஜீவன் முக்தி தீட்சை

(யாழ்ப்பாணம்)

பக்தர்களுக்கு ஸ்ரீ அம்மா பகவானின் ஜீவன் முக்தி தீட்சை வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் இடம்பெறவுள்ளது.

பக்தர்கள் அனைவரையும் வருகை தந்து ஜீவன் முக்தி தீட்சையைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு நாளும் காலை, மாலை வேளைகளில் இரண்டு மணித்தியாலம் ஸ்ரீ அம்மா பகவானின் 108 மூல மந்திரப் பூசை இடம்பெறவுள்ளது. (அ-3)

## வாள்வெட்டு சம்பவத்தில் இரு இளைஞர்கள் படுகாயம்

(மானிப்பாய்)

மானிப்பாய் தோறாந்தோட்டப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரிய வருவது,

வழமைபோல் உரையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது இனந்தெரியாத நான்கு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் வாள்வெட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இச்சம்பவத்தில் டர்சிகன்(வயது 21), ரஜீபன் (வயது 32) ஆகிய இருவருமே யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.(அ-3-23)

## மின்னியலாளர் இலவச பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இருபாலாருக்குமான மின்னியலாளர் பயிற்சி நெறி யாழ்ப்பாண பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள நிலையில் இப்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் கே.கிருஷ்ணபாலன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி நெறிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த சாதாரண தரம் வரை கல்விகற்று இருப்பதோடு விண்ணப்ப முடிவுத்திகதி அன்று 16 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி குறித்த பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் மேற்குறித்த தகுதியுடைய விண்ணப்பதாரிகள் முழுப்பெயர், முகவ்ரி, தொலைபேசி இலக்கம்,பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட முகாமையாளர், NAITA, இல.44 சோமசுந்தரம்பிள்ளை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் அனுப்பப்படும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் மின்னியலாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## கயிறிழுத்தல் போட்டி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக சம்மேளனங்களுக்கிடையிலான இருபாலாருக்குமான மாவட்ட மட்ட கயிறிழுத்தல் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் சுன்னாகம் ஸ்கந்தவரரோயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட அணிகள் அனைத்தையும் குறித்த நேரத்தில் சமுகம் தருமாறு மாவட்ட விளையாட்டுக்குழு அறிவித்துள்ளது. (அ-3-23)

## இளைஞர் சம்மேளனங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டம்

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பதிவு செய்யப்பட்ட இளைஞர் சம்மேளனங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் தெல்லிப்பழை இளைஞர் கழக சம்மேளனத்தை எதிர்த்து கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் சங்கானை இளைஞர் கழக சம்மேளனத்தை எதிர்த்து யாழ்ப்பாண இளைஞர் கழக சம்மேளனமும் ஊர்காவற்றுறை இளைஞர் கழக சம்மேளனத்தை எதிர்த்து பருத்தித்துறை இளைஞர் கழக சம்மேளனமும் சாவகச்சேரி இளைஞர் கழக சம்மேளனத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் இளைஞர் கழக சம்மேளனமும் மோதவுள்ளன.

மருதங்கேணி இளைஞர் கழக சம்மேளனத்தை எதிர்த்து நல்லூர் இளைஞர் கழக சம்மேளனமும் வேலணை இளைஞர் கழக சம்மேளனத்தை எதிர்த்து காரைநகர் இளைஞர் கழக சம்மேளனமும் மோதவுள்ளன.

அனைத்து அணிகளையும் குறித்த நேரத்தில் சமுகம் தந்து போட்டிகளை நடத்த ஒத்துழைக்குமாறு மாவட்ட விளையாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (அ-3-23)

## விளக்கு வைத்தல் நிகழ்வு

(தும்பளை)

தும்பளை அருள்மிகு நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலய விளக்கு வைத்தல் நிகழ்வு எதிர்வரும் மேமாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 5 நாட்கள் விசேட வழிபாடுகள் நடைபெற்று எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட பொங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் காணிகளில் இராணுவத்தையும் தென்பகுதி மக்களையும் குடியேற்ற அனுமதியோம்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். வலி வடக்கில் தமிழ் மக்களது 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணிகளைச் சுவீகரித்து இராணுவக் குடும்பங்களையும் தென்பகுதி மக்களையும் குடியேற்ற இராணுவம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனைக் வன்மையாகக் கண்டிப்பதுடன் இதற்கெதிராக தொடர் போராட்டங்களையும் நடத்துவோம் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

இராணுவத்தினர் வடக்கில் அபகரிக்கும் காணிகளில் இராணுவக் குடும்பங்களையும் தென்பகுதி மக்களையும் குடியேற்ற நாம் இடமளிக்கமாட்டோம். இந்தக் காணி அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்க தயாராக உள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்துவோம் என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக அவர்களின் பிரதிநிதிகளால் கைச்சாத்திடப் பட்ட கூட்டு ஒப்பந்த இரகசியம் என்ன என்பது எமக்குத் தெரியாது. இந்த ஒப்பந்தத்தால் தோட்ட தொழிலாளர்களுக்கு எந்த நன்மையும் இல்லை. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கொட்ட கலையில் நடத்திய ஜனநாயக போராட்டம் மீது அரசு வழமைபோல காடையர்களை அனுப்பி தாக்கியது. இதனை நாம் வன்மை யாக கண்டிக்கின்றோம். கைசாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தை மீள பெறும் வரை நாம் தொடர்ந்தும் போராடுவோம்.

**ஜனநாயக விரோத செயல்**

மின்கட்டண அதிகரிப்பானது சாதாரண மக்களைதான் அதிகமாக பாதிக்கின்றது.

ஆனால் இது குறித்து சரியான விளக்கம் அளிக்கவோ அல்லது இந்த பிரச்சினையை முகாமைத்துவம் செய்யவோ அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

மின்கட்டண உயர்வு குறித்து கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் விவாதம் ஒன்றைக் கோர பாராளுமன்ற அமர்வுகளை அரசு ஒத்திவைத்தது. இது ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாகும்.

**காணி அபகரிப்பு**

யாழ். வலிகாமம் வடக்கில் தமிழ் மக்களின் 6 ஆயிரத்து 400 ஏக்கர் தனியார் காணிகளை இராணுவம் சுவீகரிப்பதற்கான அறிவித்தலை விடுத்துள்ளது.

காணி சுவீகரிப்பு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் இந்த நடவடிக்கைளை அரசு மேற் கொண்டு வருகின்றது. கடந்த 26 வருடங்களாக தமிழ் மக்கள் தமது காணிகளில் மீள குடியேற முடியாதுள்ளனர். அவர்களை அவர்களது சொந்த காணிகளில் மீள்குடியமர்த்து மாறு உயர் நீதிமன்றமும் அறிவித்துள்ளது.

அத்துடன் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 2009 ஆம் ஆண்டில் வெளியிட்ட கூட்டறிக்கையில் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் குறித்த மக்கள் மீள்குடியேற்றபடுவார்கள் என உறுதியளித்துள்ளார். ஆனால் இவற்றை மீறி வடக்கு காணி அபகரிப்பில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த காணி அபகரிப்புக்கு எதிராக நேற்று வடக்கில் போராட்டம் நடத்தப்பட்டது. எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தவுள்ளோம்.

இராணுவத்தினர் வடக்கில் அபகரிக்கும் காணிகளில் இராணுவ குடும்பத்தையும் வேறு மக்களையும் குடியேற்ற திட்டமிடப்படுகிறது. இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியுள்ளார். (அ-2)

# ஆஸி. சென்ற அகதியை நாம் துன்புறுத்தவில்லை

## மறுக்கிறது இலங்கை

அவுஸ்திரேலியாவில் அடைக்கலம் புகுந்துள்ள இலங்கை புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் துன்புறுத்தப்பட்டதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என இராணுவத்தினர் தெரிவித்துளனர்.

இராணுவப் புலனாய்வு பிரிவினர் துன்புறுத்தியதாகவும் கடுமையாக விசாரணை நடத்தியதாகவும் குறித்த இலங்கை புகலிடக் கோரிக்கையாளர் வாக்கு மூலம் கொடுத்துள்ளார்.

இத்தகவல் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு ஆதரவளிக்கும் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் மிகைப் படுத்திய பிரசாரங்களின் ஓர் கட்டமாகவே அவதானிப்பதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரி வருவதாகவும் அவுஸ்திரேலிய அரசாங்கம் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தி வருவதாகவும் இதனை தடுக்கும் நோக்கில் இவ்வாறு பிரசாரம் செய்யப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.



மேலும் புகலிடக்கோரிக்கையாளர்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் துன்புறுத்துவதாக தெரிவிப்பதன் மூலம் அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் என சில தரப்பினர் எதிர்பார்க்கின்றனர்.

அவுஸ்திரேலியாவிற்குள் சட்ட விரோதமாக பிரவேசிப்பதனை நியாயப்படுத்தும் வகையில் இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

பொருளாதார நோக்கங்களுக்காகவே தற்போது அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளில் புகலிடம் கோரப்படுகின்றது. இதுவே அரசாங்கத்தின் நிலைப்பாடு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு திரும்பியிருந்த போது துன்புறுத்தப்படுவதாக இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதில் குமார் என பெயரிடப்பட்ட அந் நபர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததாகவும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் துன்புறுத்தியதாகவும் உயிரிழக்க நேரிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது எனவும் இறுதியில் தம்மை விடுதலை செய்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை பேணியதாக ஒப்புக் கொள்ளுமாறு கோரி துன்புறுத்தியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. (அ)

# தே.அ. அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

அடையாள அட்டைகள் கண்டெடுக்கப் பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கபட்டுள்ளன.

மேற்படி அடையாள அட்டை மாணிக்க வாசகர்வீதி, திருகோணமலை என்ற முகவரியை உடைய இராமநாதன் துளசிநாதன் என்பவரது (671431413V)என்ற இலக்கத்தையும் எழுதுமட்டுவாழ் என்ற முகவரியையுடைய ஜெயலட்சுமி தங்கராசா என்பவரது (475640586V) என்ற இலக்கத்தையும் கொண்ட தேசிய அடையாள அட்டைகளும் சிவநகர் உருத்திரபுரம் என்ற முகவரியை உடைய இராசமணி இராசமணி என்பவரது (586991973 V) என்ற இலக்கத்தை கொண்ட தற்காலிக அடையாள அட்டை ஆகியவையும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட அடையாள அட்டைகளை உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி யாழ். போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் என வைத்திய சாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-5)

# மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

மத்திய வங்கியின் 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மத்திய வங்கியின் அறிக்கை கடந்த புதன் கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து இதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட மத்திய வங்கியின் அறிக்கையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டதுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் அங்கீகாரம் கொடுத்துள்ளது.

மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் குறித்தும் அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப் பட்டது.

2012 ஆம் ஆண்டில் இலங்கை பொருளாதாரம் 6.4 வீத வளர்ச்சி வேகத்தைப் பதித்துள்ளது. முதலீடு தேசிய உற்பத்தியில் 30.6 வீதமானது. 2012 இல் விவசாயத்துறை 5.8 வீத வளர்ச்சி வேகத்தை பதித்துள்ளது, 2012 இல் பொருளாதார அதிகரிப்புக்கு துணையாக கைத்தொழில்துறை 10.3 வீத வளர்ச்சிவேகத்தை அடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (அ-2)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் புதிதாக இணைக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பட்டதாரி பயிலுநர் ஒருவருக்கு நியமனக் கடிதம் வழங்கப்படுவதையும் அருகில் யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்கள் முன்பிருந்த இடங்களில் மீள்குடியேற எவ்வித தடையும் இல்லை

## அமைச்சர் குணரட்ன

(கொழும்பு)


**வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தாம் முன்பிருந்த இடங்களில் மீளக்குடியமர்த் தப்படுகின்றனர். அவர்கள் முன்பிருந்த இடங்களுக்குச் செல்ல எவருக்கும் தடையில்லை என மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் தெரிவித்துள்ளார்.**

ஐ.தே.க. எம்.பி அகிலவிராஜ் காரியவசம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வாய்மொழிமூல விடைக்கான கேள்விக்கு பதிலளித்து பேசும் போதே அமைச்சர் குண ரட்ன வீரக்கோன் மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை வடக்கில் மீளக்குடியமர்வதற்காக 19 ஆயிரத்து 875 குடும்பங்கள் பதிவாகியுள் ளன. குறித்த குடும்பங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவர்களுக்குத் தேவையான உட்கட்டமை ப்பு மற்றும் கல்வி வசதிகளை வழங்குவதற்கு அதற்குப் பொறுப்பான அமைச்சு நடவடி க்கை எடுத்து வருகிறது.

இவ்வாண்டு முடிவடையும் போது தாம் முன்பிருந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப் பட்ட முஸ்லிம்களின் விபரங்களை மாவட்ட



ரீதியாக வழங்க முடியும். குறிப்பாக கிளி நொச்சியில் 618 குடும்பங்கள், மன்னாரில் 14 ஆயிரத்து 4 குடும்பங்கள் , முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 144 குடும்பங்கள், யாழ்ப்பா ணத்தில் 2 ஆயிரத்து 138 குடும்பங்கள், வவுனியாவில் 971 குடும்பங்கள். மொத்தம் 19 ஆயிரத்து 875 குடும்பங்கள் என கணக் கிடப்பட்டுள்ளன.

2009 மே மாதத்திற்கு முன் இடம்பெயர் ந்தவர்கள் சகல இனங்களையும் சார்ந்தவர் களாயினும் காணி, வீடு போன்ற உதவிகள் கிடைக்கப்பெறாத இடம்பெயர்ந்த குடும் பங்கள் சம்பந்தமாக மீள்குடியேற்ற அமைச்சு ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது.

மேற்படி கணிப்பீட்டின் படி உரிய குடும்பங் களுக்கு மஹிந்த சிந்தனை தொலை நோக்கு குறித்த கோட்பாட்டின்படி அவர்களுக்கு தேவை யான வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் கூறினார். (அ-2)

## சர்வதேச நீதிமன்றின் நீதியரசராக இலங்கை நீதிபதி

சர்வதேச நீதிமன்றம் ஒன்றில் நீதியரசர்கள் குழுவில் இலங்கையைச் சேர்ந்த நீதிபதி ஒரு வரும் இணைக்கப்பட்டுள்ளார் என பிலிப் பைன்ஸ் இஸ்டார் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கிறிஸ் பின்டே என்ற குறித்த நீதிபதி கடல் சார்ந்த விடயங்களை விசாரணை செய்யும் சர்வதேச தீர்ப்பாயத்தின் ஐந்து நீதிபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 24 ஆம் திகதி இந்த நியமனம் வழங்கப்பட்டு ள்ளது. இந்த தீர்ப்பாயம் சீனாவுக்கு எதிராக பிலிப்பைன்ஸ் முறைப்பாடு செய்துள்ள கடல் சார்ந்த ஊடுருவலுக்கு எதிரான வழக்கினை விசாரணை செய்யவுள்ளது. (அ)

## மருந்து பொருட்களை இறக்குமதி செய்ய முடிவு

சகல அரசாங்க வைத்தியசாலைகளிலும் அவசர அத்தியாவசிய உயிர் பாதுகாப்பு மரு ந்து வகைகள் கையிருப்பில் வைத்திருக்க வேண் டும் என்ற சுகாதார அமைச்சின் ஆலோசனைக் கமைய 15கோடியே 90 இலட்சம் ரூபா செல வில் மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக்கு முன்வைத்த ஆலோசனை க்கு கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடிய அமைச் சரவை கூட்டத்தின் போதே இதற்கான அங் கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (அ-2)

# மத்தள விமான நிலையத்திலிருந்து 40 பயணிகள் மட்டுமே பயணம்

அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள மத்தள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை இதுவரையில் 40 பயணிகள் மட்டுமே பயன்படுத்தியுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் 18 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ வினால் விமான நிலையம் திறந்து வைக் கப்பட்டது.

அதன் பின்னர் 40 பயணிகள் மட்டுமே இந்த விமான நிலையம் ஊடாகப் பயண த்தை மேற் கொண்டுள்ளதாக விமான நிலைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த விமான நிலையம் திறந்து வைக் கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள போதிலும் இதன் ஊடாகப் பயணத்தை மேற்கொள் கொண்ட பயணிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை நிர்வாகம் மூடிமறைத்து வருகிறது.

குறைந்தளவு பயணிகள் மட்டுமே இந்த விமான நிலையத்தை பயன்படுத்தி வருவதா லும் தரையிறங்கும் விமானங்களுக்கு பற வைகளால் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப் பதாலும் இந்த விமான நிலையம் ஊடாக சேவையை நடத்த ஏற்கனவே இணங்கியி ருந்த பல விமான நிறுவனங்கள் சேவை யைத் தொடங்க மறுத்து வருகின்றன.

இதேவேளை மத்தள விமான நிலையத்தில் எரிபொருள் தாங்கி அமைக்கப்படாதால் விமா னம் நீண்ட நேரம் மத்தளவில் தரித்து நிற்ப தும் வழமையாகிவிட்டது என சுட்டிக்காட்டப்ப டுகிறது. (அ-2)

# வலுவான வெளியுறவு கொள்கை அவசியம்

## முன்னாள் அமைச்சர் ரோஹித தெரிவிப்பு

இலங்கையில் வலுவான வெளியுறவுக் கொள்கைகள் அவசியம் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித பொகொ ல்லாகம தெரிவித்துள்ளார்.

நாம் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் சொல்லும் விடயங்கள் எம க்கே மறந்து போகும் நிலைமை காணப் படுகின்றது. எனினும் சர்வதேச சமூகம் இவ ற்றை ஞாபகம் வைத்து கேள்வி எழுப்பு கின் றது.

வாக்குறுதிகளை ஞாபகம் வைத்திருந்து அவை அமுல்படுத்தப்படுகின்றனவா என கேள்வி எழுப்புகின்றன.

எங்களது வார்த்தைகளின் மதிப்பை நிலை நாட்ட அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். வோஷிங்டனுக்கும் இலங்கைக்கும் இடை யில் நேரடித் தொடர்புகளைப் பேண வேண் டும்.

அமெரிக்காவுடன் தொடர்புகளைப் பேண மூன்றாம் தரப்பினருடன் இணைந்து செயற் படக் கூடாது. சிறந்த வெளியுறவுக் கொள் கைகளை பின்பற்றுவதன் மூலம் பிரச்சி னைகளுக்கு தீர்வு காண முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கையர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் -அசோக் காந்தா

இலங்கையர்களின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந்தா தெரிவித் துள்ளார்.

மல்வத்து அஸ்கிரி பீடாதிபதி களை சந்தித்து பிரியாவிடை பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத் திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான உயர்ஸ்தானிகராக கட மையாற்றி வந்த அசோக் காந்தா இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் பதவியொன் றுக்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் அண்மையில் இலங்கையர் களுக்கு எதிராக இடம்பெற்ற சம்பவங்கள் பொருட்படுத்தப்பட வேண்டியதில்லை என சுட்டிக்காட்டியுள்ள அவர் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தமிழக மாநில அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத் துள்ளதாகத் தெரிவித்துள்ளார். மத்திய, மாநில அரசாங்கங்களின் ஒத்துழைப்புடன் இலங்கையர்களைப் பாதுகாக்கும் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்யுமாறு மல் வத்த அஸ்கிரி பீடாதிபதிகளுக்கு அசோக் காந்தா அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்யும் இலங் கையர்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங் கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கை கடற்படையினருக்கு, இந்தியா பயிற்சியளிக்க கூடாது

## இந்திய மாநில வெளிவிவகார அமைச்சர்

தமிழக மீனவர்களுக்கு எதிரான வன்முறை களை நடத்தும் வகையில் இலங்கை கடற் படையினருக்கு இந்திய கடற்படையினர் பயி ற்சி வழங்கக்கூடாது என்று இந்திய மாநில வெளிவிவகார அமைச்சர் ஈ.அஹமட் கூறி யுள்ளார்.


நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரை யாற்றும் போது அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

மேலும் இலங்கை கடற்படையினரால் இந்த வருடத்தின் மூன்று மாத காலப்பகுதியில் மாத் திரம் 125 தமிழக மீனவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர். அவர்களின் வன்முறை தொடர்ந்து வருகின்றது.

இது தொடர்பில் மத்திய அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்வதாக தெரிய வில்லை.

மாறாக தமிழக கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்துகின்ற இலங்கை கடற்படை யினருக்கு பயிற்சி வழங்கி வருகிறது. இதனை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று அவர் தெரி வித்துள்ளார். (அ)





வடமாகாண கல்வி அமை ச்சின் ஏற்பாட்டில் புதிதாக நியமனம் பெற்ற கணித, விஞ்ஞான ஆசிரியர் களை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அண் மையில் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் சந் தித்தார். இச்சந்திப்பின் போது ஆளுநர் மங்கலவிளக் கேற் றுவதையும் கலந்து கொண்ட ஆசிரியர்களில் ஒரு பகுதியினரையும் படங் களில் காணலாம்.

(படங் கள் என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்


27

## போர்த்துக்கேயரின் முதல் படையெடுப்பு



காலதாமதத்திற்குப் பலன் கிடைத்தது. நள்ளிரவு கடந்த வேளையில் சாதாரண வள்ளம் ஒன்று அவனது மரக் கலத்தை நாடி வந்தது.

"வள்ளத்தை வரவிடுக..."



"செய்தி உண்டு..." என்றான் வள்ளத்தில் வந்தவன்.

"விரைவாகச்சொல் என்ன வென்று...."

"முதன்மந்திரி பரநிருபர் தங்களைச் சந்திக்க பண்ணை மடத்தில் தங்கியுள்ளார்."

"முதன்மந்திரியா?உடன் சந்திக்கிறேன..."

பரநிருபசிங்கன் சௌசாவைக் கேள்விக் குறியோடு ஏறிட்டான்.

"தங்களிடம் அடைக்கலம் புகுந்த மகன் எப்படியுள்ளான்?"

"எந்த மகனை?"

சௌசாவின் வினாவை பரநிருபர் புரிந்து கொண்டார்.

"யாழ்ப்பாண அரசிற்கு உரித்தானவன் பரராசசிங்கன் தான்... அங்கேகுஞ்சு நயினார் என்பவன் தான் உரித்தானவன் என்கிறான்...போகட்டும் முதன்மந்திரியாரே. இன்றைய மன்னன் சங்கிலியை அரச கட்டிலில் இருந்து நீக்கிய பின் அடுத்த அரசனை உங்கள் எண்ணப்படி நியமிப்போம்... பரராசசிங்கன் கோவைக்கு அனுப்பப்பட்டுள்ளான். மதம் மாற்றப்பட்டு புதிய பெயரோடு வருவான்... கவலைப் படாதீர்கள்."

"அடுத்த முடி யாருக்குரியது என்பது பிரச்சினையல்ல. இன்று முடிக்குரியவன் நான். என்னை மன்னனாக்குங்கள். மற்றையது இப்போது படை எடுப்பது அறிவீனம். சங்கிலி முன் கூட்டியே சகல ஆயத்தங்களும் செய்துள்ளான். நீங்கள் அவனுக்கு வசதியாகக் காலதாமதம் செய்து விட்டீர்கள். கச்சாயிலிருந்து வடக்கர் படையுடன் கச்சாய் வன்னியன் புறப்பட்டு விட்டான். தஞ்சாவூர் படையுடன் வருணகுலத்தானும் புறப்பட்டு விட்டானாம். நாளை சுண்டிக்குளமூடாகப் பிரவேசிப்பான்... பின் வாங்குவதே இப்போது நல்லது. தக்க துருணத்தை நான் அறிவிக்கிறேன்...."

சௌசாவின் படைக்கலங்கள் அமைதியாகப் பின்வாங்கின. தமிழர் படை ஆரவாரித்தது.

வானத்தில் நிலவு பவனி வந்துகொண்டிருந்த இரவுப் பொழுதில் தூரத்தில் நிழலாகத் தெரிந்த நல்லூர் ஆலயக் கோபூரக் கலசங்களைத் தன் மாளிகை உத்தரத்திலிருந்து கண்கொட்டாது சங்கிலி செகராசசேகரன் பார்த்தான். நிலவு வெளிச்சத்தில் கோபூரக் கலசங்கள் ஏழும் ஒளிர்ந்தன. இன்று மன்னனின் மனது அமைதியாகவில்லை. இரவு உறக்கத்திற்கு மஞ்சத்தை நாட மனதில்லை. பலதும் மனதில் மோதி உறக்கத்தை குலைத்தன. யாழ்ப்பாண இராச்சியத்தின் முடிதரித்து முப்பத்தைந்து ஆண்டுகளாகின்றன.

போர்த்துக்கேயரின் முதல் படையெடுப்பு வெற்றிகொள்ளப்பட்டது.

அவன் முடிதரித்து முப்பத்தைந்து ஆண்டுகளாகின்றன. எவ்வளவோ நடந்துவிட்டன. யாழ்ப்பாண இராசதானியின் மகுடத்திற்குப் போட்டியிடும் பலரை அவனறிவான்.

இந்நிலையில் தென்னிலங்கை சீதாவாக்கை இராச்சியத்தின் மகுடாதிபதி மாயாதுன்னை தன் தமையன் புவனேகபாகுவின் ஜயவர்த்தனா கோட்டையை எதிர்க்க தன் படை உதவியைக் கேட்டுள்ளான். கோட்டை மன்னனுக்கு விதியபண்டாரவின் உதவியும் போர்த்துக்கேயரின் உதவியும் உள்ளன.

போர்த்துக்கேயருக்கு யாழ்ப்பாண இராச்சியத்தின் படை வலிமையைக் காட்ட எனக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எதற்கும் சேனாதிபதி சண்பக மாதாக்கரையும் கனகராஜனையும் கலந்து பேசவேண்டும்.

இருவரும் அழைக்கப் பட்டனர்.

"போர்த்துக்கேயரின் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் குறைத்து மதிப்பிட முடியாது. மாயாதுன்னைக்கு உதவத்தான் வேண்டும். எதற்கும் தஞ்சாவூர் மன்னனின் உதவியையும் பெறுவோம்..."

"விதியபண்டாரனைக் குறைவாக எண்ணிவிட முடியாது..."

செங்கை ஆழியான்

(தொடரும்)

# தகிதகிக்கும் தமிழக அரசியல்!


பிரபல தமிழ் பத்திரிகையான தினத்தந்தி அதிபர் சிவந்தி ஆதித்தனின் மறைவு அரசியலின் இரு துருவங்களை ஓரிடத்தில் சங்கமிக்க வைத்துள்ளது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதியும், தேசிய முற்போக்கு திராவிட கழக தலைவர் விஜயகாந்தும் போயஸ் கார்டனில் உள்ள சிவந்தி ஆதித்தன் இல்லத்தில் சந்தித்துள்ளார்கள். மறைந்த சிவந்தி ஆதித்தன் உடலுக்கு மலர் வளையம் வைக்கப்போன இடத்தில் நிகழ்ந்த இந்த சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

2005 இல் தே.மு.தி.க தொடங்கிய பிறகு தன் தி.மு.க எதிர்ப்பில் விஜயகாந் சற்றும் குறையவில்லை. குறிப்பாக 2006 முதல் 2011 வரை நடைபெற்ற தி.மு.க ஆட்சியின் போது இந்த எதிர்ப்பில் மிகவும் உறுதியாகவே இருந்தார். அதேபோல் எதிர்கட்சியாக இருந்த அ.தி.மு.க மீதும் அவரது சாடல்கள் நிற்கவில்லை. ஏனென்றால், தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.விற்கு தான் மாற்று சக்தி என்ற பிரசாரத்தை முன்னெடுத்து விஜகாந் கட்சி தொடங்கியதால் இரு கட்சிகளையும் எதிர்ப்பது என்பதில் காரம் குறையாமலே இருந்தார். அவர் வாக்குகளைப் பிரித்ததன் விளைவாக 2006 இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. பாட்டாளி மக்கள் கட்சி ம.தி.மு.க. போன்ற கட்சிகள் தேர்தல் கூட்டணிகளத்தில் மதிப்பை இழந்தன.பிறகு 2009 நாடாளுமன்றத் தேர்தலிலும் தனியே நின்றார் விஜயகாந். அதனால், தி.மு.க அணியே அதிக எம்பிக்களை தமிழகத்தில் பெற்றது. அ.தி.மு.கவின் வெற்றிமுகம் படுமோசமாக பாதிக்கப்பட்டது. இது போன்ற சூழ்நிலையில் தி.மு.க காங்கிரஸ் கூட்டணியை வீழ்த்த, விஜயகாந் தேவை என்ற எண்ணவோட்டத்திற்கு வந்தது அ.தி.மு.க.; அதனால், 2011 சட்டமன்ற தேர்தலில் இரு கட்சிகளும் கூட்டணி சேர்ந்தன; தி.மு.க கூட்டணியை வீழ்த்தி, தமிழகத்தில் ஆட்சியைப் பிடித்தன. அ.தி.மு.க. கூட்டணி வெற்றிக்கு விஜயகாந் பெருமளவில் உதவினார் என்பது அவரது கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற 10 சதவீத வாக்குகளை வைத்து சொல்லி விடமுடியும். இந்த வெற்றி மூன்றாவது சக்தி என்ற அந்தஸ்தில் இருந்த காங்கிரஸை பின்னுக்குத் தள்ளியது. அது மட்டுமன்றி பாட்டாளி மக்கள் கட்சியும்(டாக்டர் ராமதாஸ்), விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் (திருமாவளவன்) ஒரே கூட்டணியில் இருந்தாலும், விஜயகாந் இருக்கும் கூட்டணியை வீழ்த்த முடியாது என்ற நிலை உருவானது.

தி.மு.க மற்றும் அ.தி.மு.க வின் வெற்றி தோல்வியை நிச்சயிப்பது விஜயகாந் என்ற நிலை 2011 சட்ட மன்ற தேர்தலுக்குப் பிறகு உருவானது. இது போன்ற சூழ்நிலையில் தான் அ.தி.மு.க விற்கும் விஜயகாந் திற்கும் மோதல் வெடித்தது. அவரது கட்சியான தே.மு.தி.க ஆளுங்கட்சி கூட்டணியிலிருந்து வெளியேறியது. இதன் பிறகு விஜயகாந்தை தி.மு.க அணிக்கு கொண்டு வந்து விடவேண்டும் என்ற விதத்தில் தனது அரசியல் தந்திரங்களை மேற்கொள்ளத் தொடங்கினார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. எதிர்க்கட்சி தலைவராக இருக்கும் விஜயகாந் சட்டமன்றத்திலிருந்து சஸ்பென்ட் செய்யப்பட்டதைக் கண்டித்தார். விஜயகாந் மீது போடப்படும் அவதூறு வழக்குகளைக் கண்டித்தார். விஜயகாந் தரப்பு எம்.எல்.ஏ.க்கள் சட்டமன்றத்தில் சஸ்பென்ட் செய்யப்படுவதை விமர்சித்தார்.

தமிழகத்தில் தே.மு.தி.க.விற்கு நடக்கும் நெருக்கடிகளைப் பார்த்து அவர்களுக்காக குரல் கொடுப்பவர் தி.மு.க.தலைவர் கருணாநிதி மட்டுமே என்ற எண்ணம் ஏற்பட்டது. ஏன் தே.மு.தி.க தொண்டர்கள் மத்தியிலேயே கூட அந்த எண்ணம் உருவாக ஆரம்பித்தது.இது போன்றதொரு சூழ்நிலையில் சில மாதங்களுக்கு முன்பு தன் மகள் திருமணத்திற்காக நேரில் சந்தித்து அழைப்பிதழ் கொடுத்தார் தி.மு.க.எம்.பி திருச்சி சிவா. அந்த அழைப்பிதழே தி.மு.க தலைவரின் அனுமதியுடன்தான் கொடுக்கப்பட்டது. அதனை ஏற்று விஜயகாந் திருச்சியில் நடைபெற்ற திருமணத்திற்கு வந்திருந்தால், அப்போதே கருணாநிதி - விஜயகாந் சந்திப்பு நடைபெற்றிருக்கும். ஆனால் திருச்சியில் நடைபெற்ற அந்த திருமணத்திற்கு விஜயகாந் செல்லவில்லை.

ஆனாலும் தி.மு.க தரப்பு விஜயகாந்தை நோக்கிவீசும் அன்புக்கணைகளை குறைக்கவில்லை. குறிப்பாக காங்கிரஸ் கூட்டணியிலிருந்தும் மத்திய அரசிலிருந்தும் தி.மு.க விடை பெற்ற பிறகு, இந்தப் பாசப் போராட்டம் மேலும் அதிகமானது. சென்ற ஏப்ரல் 13ஆம் திகதி தி.மு.க தலைவர் கருணாநிதி ஓங்கி குரல் கொடுப்போம் வாரிர் என்று பரபரப்பு அறிக்கை விட்டார். அது அவர்கட்சி உடன்பிறப்புகளுக்கு எழுதிய கடிதம் என்றாலும் அதில் தே.மு.தி.க படும் அவஸ்தைகள், விஜயகாந் திற்கு நேரும் சங்கடங்கள் போன்ற



வற்றை பிரதானமாக பட்டியலிட்டிருந்தார். அந்த கடிதத்தில் அவர், தமிழகத்தில் 2011 சட்டமன்ற தேர்தலுக்குப் பின் பிரதான எதிர்க்கட்சியாக தே.மு.தி.க.தான் அமைந்தது. கடந்த தேர்தலில் அ.தி.மு.க.வின் தோழமை கட்சிதான் தே.மு.தி.க தற்போது அந்தக் கட்சி இந்த ஆட்சியிலே என்ன பாடுபடுகிறது? தே.மு.தி.க. விற்கும், தி.மு.கழகத்திற்கும் தோழமை கிடையாதுதான். ஆனாலும் அ.தி.மு.க. அரசு தே.மு.தி.க என்ற எதிர்க்கட்சியின் மீது எடுக்கும் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது வேதனையாகத்தான் இருக்கிறது என்று உருக்கமாக எழுதினார். இப்படி எழுதி விட்டு அதே கடிதத்தின் இறுதியில் எதிர்க்கட்சி என்ற ஒன்றே இருக்கக் கூடாது. இருந்தாலும் அது தன் கடமையை ஆற்ற அனுமதிக்கக்கூடாது என்ற எண்ணத்தோடு காரியங்கள் நடத்தப்படுகின்றன. ஜனநாயக மாண்புகளில் நம்பிக்கை கொண்டுள்ள அனைவரும் ஒருங்கிணைந்து



## கருணாநிதி- விஜயகாந் திடீர் சந்திப்பு

ஓங்கிக் குரல் கொடுத்திட வாரீர் என்று அன்புடன் அழைக்கிறேன் என்றார். இது பிரதானமாக விஜயகாந் தலைமையிலான தே.மு.தி.க. வுக்கு விடப்பட்ட அழைப்பு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

439

## டீசல் குடிக்கும் பிசாசு



ரங்கன், ராமன் இருவரும் விவசாயிகள். ரங்கனின் சகலை இராமன். அதாவது ரங்கனின் மனைவியும் ராமனின் மனைவியும் சகோதரிகள். இரு குடும்பங்களும் பாலையூர், சோலையூர் என்ற அடுத்த டுத்த கிராமங்களில் இருந்தன. ரங்கன் இருந்தது பாலையூரில்.

ராமன் விவசாயத்தைப்பற்றிய எந்தவொரு விடயத்தையும் ஏனைய அனுபவ்மிக்க விவசாயி களுடன் கலந்தாலோசித்த பின்பே செய்வான். உள்ளூரில் இருந்த அரசாங்க விவசாய அதிகாரிகளையும் அவ்வப்போது சந்தித்து விவசாயத்தைப் பற்றிய பல புதிய தகவல்களை அறிந்து கொண்டே இருப்பான். தான் கற்றதை ஏனைய விவசாயிகளிடமும் பகிர்ந்து கொள்வான். இத்தகைய கருத்து மற்றும் தகவல் பரிமாற்றத்தால் அவன் நிலத்தின் விளைச்சல் செழிப்பாக இருந்ததுடன் அவனுக்கும் கிராமத்தில் பெருமதிப்பிருந்தது.

ஆனால் அவன் சகலை ரங்கன் அதற்கு நேர்மாறானவன். தன க்குத் தெரிந்த எந்த விடயத்தையும் மற்ற விவசாயிகளுக்கு சொல்லமாட்டான்.

## அம்புலிமாமா கதைகள்

தனது நிலத் தில் நல்ல விளைச்சல் ஏற்பட்டால் அதற்கான காரணத்தை மற்றவர்களுக்குச் சொல்லமாட்டான். தன் நிலத்தில் பயிர்கள் ஏதாவது நோய் கொண்டு வாடினாலோ, பூச்சிகள் தாக்கினாலோ அதையும் மற்றவர்களுக்கு சொல்லமாட்டான். தனக்கு இரண்டு கண் போனாலும் பரவாயில்லை. அடுத்தவனுக்கு ஒரு கண்ணாவது போகவேண்டும் என்று நினைக்கும் நல்ல மனம் படைத்தவன். தன் சகலை தன்னைவிட நன்றாக வசதியுடன் வாழ்வதைக்கண்டு சகலை ராமன் மீது அவனுக்கு உள்ளூரப் பொறாமை! அவனை விட எப்படியாவது முன்னேற வேண்டும் என்பதே அவன் கனவு!

ஓராண்டு மழையே பெய்யாமல் போக சோலையூர், பாலையூர் கிராமத்துக் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து போயிற்று. வழக்கப்படி கிணற்றிலிருந்து ஏற்றம் வைத்து வயலுக்குத் தண்ணீர் இறைப்பது மிகவும் கஷ்டமாகப் போயிற்று. உடனே சோலையூர் கிராம விவசாயிகள் ராமனிடம் வந்து ஆலோசனை கேட்க ராமன் அவர்களை அழைத்துக்கொண்டு விவசாய அரசு அதிகாரியிடம் சென்று யோசனை கேட்க அவர் டீசல் என்ஜினுடன் பொருத்தப்பட்ட பம்பு செட் வாங்கி உபயோகப்படுத்தச் சொன்னார். உடனே எல்லா விவசாயிகளும் ராமன் ஆலோசனைப்படி ஒன்று சேர்ந்து பணம் திரட்டி பொதுவில் ஒரு பம்பு செட் வாங்கினார்கள். எல்லோரும் முறை வைத்து அதைப் பயன்படுத்த மிக குறுகிய காலத்தில் ஒரு பம்ப் செட் மூலம் பல வயல்களுக்கு ஒரே நாளில் தண்





ணீர் பாய்ச்ச முடிந்தது. எல்லா விவசாயிகளும் இதனால் பயன்பெற்றனர்.

இதைப்பற்றிய செய்தி ரங்கனின் செவிகளையும் எட்டியது. உடனே பாலையூரிலும் ஏனைய விவசாயிகள் ஒன்று சேர்ந்து பணம் திரட்டி பம்பு செட் வாங்க முற்பட்டனர். ஆனால் ரங்கள் வழிதான் தனிவழி ஆயிற்றே! அவன் யாருடனும் கூட்டுச் சேரவில்லை. பணம் கடன் வாங்கி தன்னுடைய உப யோகத்திற்காக மட்டும் ஒரு பம்பு செட் வாங்க விரும்பினான். உடனே உள்ளூர் ராம் சேட்டிடம் சென்று கடன் வாங்கினான்.

தான் கடன் வாங்கிய விடயத்தையும் தனக்கென்று தனியாக பம்பு செட் வாங்கப்போகும் விடயத்தை யும் தன் சகலையிடம் சொல்லவில்லை. கிராமத்து ஏனைய விவசாயிகளிடமும் அதைப்பற்றி மூச்சு விடவில்லை. தன்னந்தனியாக ஒருநாள் நகரத்துக்கு பம்பு செட் வாங்கப் போனான். எப்படிப்பட்ட பம்பு செட் எந்த நிறுவனம் தயாரிப்பது நன்றாக வேலை செய்யும் என்று அவனுக்கு சுத்தமாகத் தெரியாது. ஏனைய விவசாயிகளை அவன் கேட்கவும் இல்லை. நகரத்தில் கடைத் தெருவைச் சுற்றிச்சுற்றிவர ஒரு ஆள் ரங்கனை நோட்டம் விட்டான். ரங்கனை அணுகிய அவன் அவனிடம் பேச்சுக் கொடுத்து அவன் எதற்காக நகரம் வந்திருக்கிறான் என்று கேட்டுத் தெரிந்து கொண்டதும் ரங்கனை ஏமாற்றிப் பணம் பறிக்கத் திட்டமிட்டு அவனை ஒரு பம்பு செட் கடைக்கு அழைத்துச் சென்றான்.

அந்தக் கடைக்காரனிடம் பம்பு செட் வாங்க யாரையாவது கூட்டி வந்தால் அந்தத் தரகனுக்கு கடைக்காரன் கமிஷன் தருவான். அதன்படி அந்த ஆள் ரங்கனை அந்தக் கடைக்கு அழைத்துச் சென்று மிகவும் மட்டமான பம்பு செட் ஒன்றை ரங்கனின் தலையில் கட்டி விட்டு தன்கமிஷனைப் பெற்றுக் கொண்டு ஓடிவிட்டான்.

தன் கிணற்றில் புதிய பம்பு செட்டைப்பொருத்தியவுடன் ரங்கன் எதிர்பார்த்தபடி இல்லாமல் பம்பில் தண்ணீர் மிகக் குறைவாக வந்தது. டீசலை மட்டும் பம்பின் என்ஜின் வஞ்சனையில்லாமல் தாராளமாகக் குடித்தது. ஆனால் தண்ணீர் மிகக் குறைவாக வந்தது. புதிய பம்பில் ஏன் இந்தப் பிரச்சினை என்று ரங்கனுக்குப் புரியவேயில்லை. பக்கத்து வயல்களில்



பம்பு செட்டில் தாராளமாக தண்ணீர் வர தன் பம்பு செட் மட்டும் ஏன் தகராறு செய்கிறது என்று புரியவில்லை.


ஒருநாள் பக்கத்து வயலில் வேலை செய்து கொண்டிருந்த கறுப்பு சாமி ரங்கனின் பம்பு செட்டைப் பார்த்துவிட்டு அடப்பாவிப் பயலே இன்னுமா புரியவில்லை? உன் பம்பு செட்டில் ஒரு பிசாசு குடியிருக்கிறது. அதனால்தான் பம்பு சரியாக வேலை செய்வது இல்லை. நீ காளி கோயில் பூசாரி யைக் கூட்டிவா! அவன் பம்புக்கு தாயத்துக் கட்டி பிசாசை விரட்டு வான் என்றான். வெளியில் யாருக்கும் இந்த விடயம் தெரியவேண்டாமென்று நினைத்த ரங்கன் நள்ளிரவில் பூசாரியை இரகசியமாக பேய் ஓட்டக் கூட்டிவந்தான். பூசாரியும் பலமாக பூசை போட்டு மந்திரித்த ஒரு தாயத்தை பம்பில் கட்டிவிட்டு ஆயிரக் கணக்கில் பணம் வாங்கிக் கொண்டு போனான். அப்படியும் பிசாசு டீசல் குடிப்பதை நிறுத்தவில்லை.

எத்தனையோ இரகசியமாக செயற்பட்டும் ரங்கனின் பம்பில் பிசாசு குடியிருப்பது பாலையூரில் எல்லோருக்கும் தெரிய அவன் வயலில் வேலை செய்யவே யாரும் முன்வரவேயில்லை. ஒவ்வொருவரும் பிசாசை விரட்டத் தங்களுக்குத் தெரிந்த யோசனைகளைக் கூறினர்.

தற்செயலாக அப்போது ஏதோ வேலை விடயமாக பாலையூர் வந்த ராமன் தன் சகலையின் பம்பில் குடியிருக்கும் பிசாசு பற்றி செய்தி கேட்டு நேராக ரங்கன் வீட்டுக்குச் சென்று அவனுடன் வயலுக்குச் சென்று பம்பு செட்டைப் பார்வையிட்டான்.

பின்பு ரங்கனைப்பார்த்து சகலை! இத்தனை விடயம் நடந்திருக்கி றது. நீ என்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லையே! பம்பு செட் வாங்குவதற்கு முன் என்னைக் கலந்தாலோசித்து இருக்கலாமே! அல்லது விடயம் தெரிந்த யாரிடமா வது யோசனை கேட்டிருக்கலாமே! உன் பம்பு செட்டில் பேயும் இல்லை. பிசாசும் இல்லை. இது மிக மோசமான பம்பு செட். இதை யாரோ உன் தலையில் கட்டியிருக்கிறார்கள். தவிர பம்பின் தண்ணீர் உறிஞ்சும் குழாய் அளவு சரியில்லை. அதனால் தான் என் ஜின் மிக அதிகமாக டீசலைப் பயன் படுத்துகிறது. குழாயின் மட்டத்தை உயர்த்து ஓரளவு தண்ணீர் நன்றாக வரும். தண்ணீரைக் கிணற்றிலிருந்து உறிஞ்ச முடியாததற்கு பம்பின் தரக் குறைவும் குழாயின் உயரமும் தான் காரணம்! என்று விளக்கினான்.

ராமனின் வார்த்தைகளைக் கேட்டு ரங்கனுக்கு அவமானமாக இருந்தது. இத்தகைய நல்ல மனிதனைப் பார்த்தா பொறாமைப்பட்டோம் என்று வருந்தினான். தன்னு



டைய குறுகிய மனப்பான்மையை எண்ணி வெட்கப்பட்டான். ராமனுக்கு தன் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்த பின் அன்று முதல் முற்றிலும் புதிய மனிதனாக மாறினான் ரங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச புத்தாக்குநர் போட்டியில் இலங்கைக்கு தங்கம், வெள்ளி பதக்கங்கள்

(கொழும்பு)

சர்வதேச புத்தாக்குநர் போட்டியில் இலங்கைக்கு தங்கப் பதக்கமொன்றும் வெள்ளிப்பதக்கமொன்றும் கிடைத்துள்ளதாக தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அணு சக்தி அமைச்சு கூறியுள்ளது.

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்ற குறித்த போட்டியில் 42 நாடுகளைச் சேர்ந்த 600 புத்தாக்குநர்கள் பங்கேற்றுள்ளனர்.

இலங்கை சார்பாக 2012 இல் சிறந்த புத்தாக்குநராக மஞ்சு குணவர்த்தன பங்கேற்றதோடு இவர் எரிசக்தி மற்றும் மருத்துவப் பிரிவு சார்ந்த இரு போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

இவர் சமர்ப்பித்த சி.எப்.எல். மின் குமிழுக்குப் பதிலாக நெனோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தயாரித்த விசேட சி.எப்.எல். பல்பிற்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

தொற்றுநோய் பரவுவதை கட்டுப்படுத்துவது தொடர்பில் இவர் முன்வைத்த படைப்பிற்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. சர்வதேச விருது பெற்ற மஞ்சுவை அமைச்சர் சம்பிக்க ரணவக்க கடந்த புதன் கிழமை அமைச்சரவையில் வைத்து சந்தித்தார். விருதுபெற்றது குறித்து அவருக்கு பாராட்டுத் தெரிவித்த அமைச்சர் நாட்டின் அபிவிருத்திக்கு புத்தாக்குநர்களின் பங்களிப்பு பெறப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (அ-2)

# மத வழிபாட்டு தலங்களுக்கான கட்டணங்களில் மாற்றமில்லை

(கொழும்பு)

மின்சார கட்டணங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள போதும் மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின்சாரக் கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லையென இலங்கை மின்சார சபையின் மேலதிக நிதி முகாமையாளர் பி.கே.குலதுங்க தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டணங்களில் அண்மையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் ஏற்கனவே நடைமுறையிலுள்ள கட்டணங்களே மத வழிபாட்டுத் தலங்களுக்கு அமுலில் இருக்கும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதற்கிணங்க பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதத் தலங்களுக்கு இந்த விதிமுறை ஏற்புடையதாகவிருக்கும் என தெரிவித்த அவர் ஏற்கனவே நடைமுறையிலுள்ள கட்டணங்களைத் தொடர்ந்து அமுல்படுத்த இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## அழகுசாதன பொருட்களில்

# உலோகப் பொருட்களை தடுப்பதற்கு வர்த்தமானி

அழகுசாதனப் பொருட்களில் உலோகப் பொருட்கள் உள்ளடக்கப்படுவதை தடுப்பதற்காக விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடவுள்ளதாக அழகுசாதனப் பொருள் மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

சந்தைகளில் விற்பனைக்கு வரும் சில அழகுசாதனப் பொருட்கள் சருமத்தை வெளிர வைக்கிறது. சில களிம்பு வகைகளினால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

இத்தகைய களிம்புகளை தயாரிக்க உலோகப் பொருட்கள், ஈயம், ஆசனிக் போன்ற உலோகப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

எந்தளவு உலோகப் பொருட்கள் இவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றதென சரியாக அறிந்து கொள்ள முடியாததால் இது தொடர்பில் தர நிர்ணய நிறுவனத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நாடு பூராவும் விற்கப்படும் அழகுசாதனப் பொருட்களின் மாதிரிகளை திரட்டி அது குறித்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு அவற்றிலுள்ள உலோகப் பொருட்கள் குறித்தும் ஆய்வு செய்யப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# மேன்முறையீட்டு நீதவான் வீட்டை உடைத்து கொள்ளை

மேன் முறையீட்டு நீதவான் ரோஹினி மாரசிங்கவின் வீட்டை உடைத்து இனந்தெரியாத நபர்கள் கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிரிஹான நடுகாரவத்த பகுதியில் அமைந்துள்ள வீட்டில் யாரும் இல்லாத போது இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடாத தருணத்திலே இக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகிறது. சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)




★ *1124* -முதலாம் டேவிட் ஸ்கொல்லாந்து மன்னனானான்.

★ *1296*- லண்டனில் முதலாம் எட்வேட் மன்னன் டன்பார் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் ஸ்கொல்லாந்தரைத் தோற்கடித்தான்.

★ *1521*-நாடுகாண் பயணி பேர்டினண்ட் மகலன் பிலிப்பைன்சில் பழங்குடியினரால் உயிரிழந்தார்.

★ *1522*- மிலான் நகரைக் கைப்பற்ற இடம் பெற்ற போரில் பிரெஞ்சு மற்றும் சுவிட்சர்லாந்துப் படையினரை ஸ்பானியப் படையினர் தோற்கடித்தனர்.

★ *1565*-பிலிப்பைன்சின் முதலாவது ஸ்பானியக் குடியேற்ற நாடாக சேபு (cebu) அமைக்கப்பட்டது.

★ *1667*-குருடரான ஜோன் மில்டன் தான் எழுதிய பரடைஸ் லொஸ்ட் என்ற காவியத்தின் காப்புரிமையை 10 யூரோவிற்கு விற்றார்.

★ *1813*-1812 போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் ஒண்டோரியாவின் தலைநகர் யோர்க்கை கைப்பற்றின.

★ *1840*- லண்டனில் புதிய வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

★ *1865*-2ஆயிரத்து 400பேரை ஏற்றிச் சென்ற ஐக்கிய அமெரிக்காவின் சுல்டானா என்ற நீராவிக் கப்பல் டென்னசிக்கருகில் வெடித்து மூழ்கியதில் ஆயிரத்து 700பேர் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்க உள்நாட்டுப் போரில் சிறைப் பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட கூட்டணிப் படையினராவர்.

★ *1904*-அவுஸ்திரேலியாவின் முதலாவது தேசிய அரசை அவுஸ்திரேலியத் தொழிற்கட்சி அமைத்தது.

★ *1909*- துருக்கியின் சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீட் பதவியில் இருந்து அகற்றப்பட்டு அவனது சகோதரன் ஐந்தாம் மெஹ்மெட் ஆட்சிக்கு வந்தான்.

★ *1941*-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் கிரேக்கத் தலைநகர் ஏதென்ஸ் நகரை அடைந்தன.

★ *1945*-2 ஆம் உலகப் போர்: கடைசி நாசி ஜேர்மன் படைகள் பின்லாந்திலிருந்து வெளியேறின.

★ *1945*- 2ஆம் உலகப் போர்: நாசிக் கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான வோல்கி ஷெர்பியோ பாக்டர் நிறுத்தப்பட்டது.

★ *1959*-மக்கள் சீன குடியரசிலிருந்து கடைசி கனேடிய மத பரப்புனர் வெளியேறினர்.

★ *1960*-பிரெஞ்சு நிர்வாகத்தின் கீழ் ஐ.நாவின் நேரடி ஆட்சியின் கீழிலிருந்த டோகா விடுதலை அடைந்தது.

★ *1961*-சியேரா லியோனி ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ *1967*-கனடாவின் மொன்ட்ரியால் நகரில் எக்ஸோ 67 கண்காட்சி ஆரம்பமானது.

★ *1974*- அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சனுக்கு எதிராக வோஷிங்டன் டிசியில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்றனர்.

★ *1981*-Xerox parc முதன் முறையாக கணனி mouse ஐ அறிமுகப்படுத்தியது.

★ *1992*- சேர்பியா மற்றும் மொண்டெனேகிரோவை உள்ளடக்கிய யூகொஸ்லாவிய கூட்டுக் குடியரசு அமைக்கப்பட்டது.

★ *1993*- காபோனில் இடம்பெற்ற விமான விபத்தில் காம்பியாவின் தேசிய காற்பந்தாட்ட அணியினர் அனைவரும் உயிரிழந்தனர்.

★ *1994*-தென்னாபிரிக்காவில் முதல் தடவையாக கறுப்பினத்தவரும் வாக்களித்த மக்களாட்சி முறையிலான தேர்தல் இடம்பெற்றது.

★ *2002*-நாசாவின் பயனியர் 10 விண்கலத்துடன் கடைசி தடவையாக தொடர்புகள் கிடைத்தன.

★ *2007*-எஸ்தோனியாவின் தலைநகர் தாலின் நகரில் இருந்த சோவியத்தின் செம்படையின் நினைவுச் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது.

**பிறப்புகள்**

★ *1723*- பிலிப்பு தெ.மெல்லோ, கொழும்பில் பிறந்த கிறிஸ்தவ தமிழ் அறிஞர் (இ.1790)

★ *1902*-கந்தமுருகேசனார், ஈழத்துப் பெரியார், மூதறிஞர் (இ.1965)

★ *1942*-வலேரி பொல்யாக்கொவ், ரஷ்ய விண்வெளி வீரர்

**இறப்பு**

★ *1521*-பேர்டினன்ட் மகலன், போர்த்துக்கேய மாலுமி (பி.1480)

### பேர்டினன்ட் மகலன்




மகலன் போர்த்துக்கேய மாலுமி ஆவார். உலகைச் சுற்றி வந்த முதல் மனிதராக அறிமுகம் ஆனவர். இவர் 1519 இல் உலகைக் கப்பல்மூலம் சுற்றி வந்து நிறைவு செய்தார். பசுபிக் கடல் என பெயரிட்டவரும் இவரே ஆவார்.

இவருடைய இந்தப் பயணம் மனித வரலாற்றிலேயே மிகச் சிறப்பு வாய்ந்தது எனலாம். இந்தப் பயணத்தை முழுமையாக முடிப்பதற்கு மூன்றாண்டுகளுக்கு குறைவான காலமே பிடித்தது.

மகலன் மிகச் சிறிய அலங்கோலமான கசிவுடைய ஐந்து கப்பல்களுடன் ஸ்பெயினிலிருந்து தமது பயணத்தை தொடங்கினார். அவற்றில் ஒரு கப்பல் மட்டுமே பாதுகாப்பாக ஐரோப்பா மீண்டது.

அவருடன் மொத்தம் 265 பேர் சென்றனர். அவர்களில் 18 பேர் மட்டுமே உயிரோடு திரும்பினர். இந்தப் பயணத்தின் போது இறந்தவர்களில் மகலனும் ஒருவர்.

ஆயினும் அவருடைய சாதனையின் செல்வாக்கு மிகச் சொற்பமே ஆகும். படித்த ஐரோப்பியர்கள் பூமி உருண்டை ஆனது என்பதை ஏற்கனவே அறிந்திருந்தனர்.

மேலும் மகலன் பயணம் செய்த கடல்வழி ஒரு முக்கியமான வாணிகத் தடமாக ஆகிவிடவில்லை. வாஸ்கொடகாமாவின் பயணத்தைப் போலன்றி மகலன் பயணம் ஐரோப்பாவிலோ கிழக்கு நாடுகளிலோ பெரும் செல்வாக்கை பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அரசியல் பாரம்பரியங்கள்- சிந்தனைக் குழாம்?

தமிழ் மக்கள் மத்தியிலுள்ள எந்தவொரு கட்சியிடமும் தமிழ்ச் சிந்தனைக் குழாம் (திங் ராங்) இல்லை. இதை இன்னும் கூராகவும் துலக்கமாகவும் கூறின் தமிழ் அரசியலில் தமிழ்ச் சிந்னைக்குழாம் எனப்படும் பாரம்பரியமே கிடையாது எனலாம். ஒரு பேரழிவுக்கும், பெருந்தோல்விக்கும் பின்னரான, கடந்த நான்கு ஆண்டுகளில் கூட அது பற்றித் தீவிரமாக சிந்திக்கப்படவில்லை. இது மிகவும் கவலைக்கிடமான ஒரு விடயமாகும்.

(திங் ராங்) *சிந்தனைக் குழாம்* எனப்படுவது, ஒரு மேற்கத்தேய பொறிமுறை தான், அரசியல், பாதுகாப்பு, பொருளாதாரம் போன்ற இன்னோரன்ன துறைகளில் முடிவுகளை எடுக்கும் பொறுப்பிலிருப்பவர்களுக்கு ஆலோசனை பகரும் அமைப்பே அது. அதாவது, அறிவுக்கும்- செயலுக்கும் அல்லது அறவுக்கும்- அதிகாரத்துக்கும் இடையிலான பொறுப்புக் கூறவல்ல ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட பொறிமுறையே அது.

கீழைத்தேய சமூகங்களில் மன்னராட்சிக் காலங்களில் மன்னர்கள், ராஜகுருக்களையும், ரிஷிகளையும் மந்திரிகளையும் தமக்கு அருகே வைத்திருந்தார்கள். பிளேட்டோ **கூறுவது போல, ஞானிகளாக அரசர்கள் இருந்தார்களோ இல்லையோ, ஞானிகளை மதிக்கும் அரசர்கள் மகிமைக்குரியவர்களாக கணிக்கப்பட்டார்கள்.** எனினும் மன்னர்கள் காலத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு மதியுரைப் பொறிமுறை காணப்படவில்லை. அதாவது, அறிவுக்கும் அதிகாரத்திற்கும் இடையிலான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட, பரஸ்பரம் பொறுப்புக்கூற வல்ல ஓர் இடை ஊடாட்டப் பரப்பாக அது ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**திங் ராங் அல்லது சிந்தனைக் குழாம்** எனப்படும் ஒரு நவீன தோற்றப்பாடு குறிப்பாக, கடந்த நூற்றாண்டில்தான் பெருவளர்ச்சி பெற்றது. அதிலும் குறிப்பாக, தகவல் புரட்சியின் பின்னணியில் தான் அது ஒப்பீட்டளவில் சுயாதீனமான இப்போதுள்ள வளர்ச்சிகளைப் பெற்றது. **தொடக்க காலங்களில் அது அதிக பட்சம் அதிகாரத்தின் செல்வாக்கு வலயத்துக்குள்ளேயே இருந்தது. அதிகாரத் தரப்பினால் போஷிக்கப்பட்டது. ஆனால், மேற்கத்தேய ஜனநாயக பண்பாட்டின் வளர்சியின் பின்னணியில் படிப்படியாக சிந்தனைக் குழாங்கள், அவியற் சுயாதீனம் மிக்கவைகளாக வளர்ச்சியடையலாயின.**

தகவல் புரட்சியோடு அறிவு முன்னெப்பொழுதையும் விட அதிகமாக விடுதலையடையத் தொடங்கியது. மனித குல வரலாற்றில் அறிவு இவ்வாறாக ஓரிடத்தில் திரட்டப்பட்டதும் இந்தளவிற்கு விடுதலை அடைந்ததும் இதுதான் முதற்தடவை. எனவே, மூளை உழைப்பாளிகளால், உருவாக்கப்பட்ட (திங் ராங்கும்) *சிந்தனைக் குழாம்* ஒப்பீட்டளவில் அதிகம் சுயாதீனம் அடைந்தது இன்ரனெற் புரட்சியோடு தான். அதாவது, அதிகாரத்திற்கும் அறிவுக்கும் இடையிலான உறவில் அறிவானது கூடிய பட்ச சுயாதீனத்தோடு செயற்படக்கூடிய வாய்ப்புகளை தகவல் புரட்சியே வழங்கியது. எனவே, அறிவுக்கும் அதிகாரத்துக்கும் இடையிலான பரஸ்பர தங்குநிலையானது புதிய வளர்ச்சிகளைப் பெறலாயிற்று. அதாவது, அறிவானது அதிகபட்சம் அதிகாரத்தில் தங்கியிராது,சுயாதீனமாக தொழிற்படும் ஒரு வளர்ச்சிக்குரிய ஆகக்கூடியபட்ச சாத்தியக் கூறுகளை தகவல் புரட்சி உருவாக்கியது.

**தற்பொழுது அனைத்துலக அரங்கில் அதிகாரத்திற்கு விசுவாசமான அல்லது ட்ரான்ஸ் நேஷனல் கோப்ரேஷன்களால் (ரி.என்.சி) போஷிக்கப்படும் சிந்தனைக் குழாம்களும் உள்ளன.** அதேசமயம் அதகபட்சம் சுயாதீனமாகத் தொழிற்படும் சிந்தனைக் குழாம்களும் உண்டு. இத்தகைய ஒரு பூகோளப் பின்னணியில் வைத்தே தமிழ்த் தேசியத்திற்கான சிந்தனைக் குழாம்களின் முக்கியத்துவத்தைக் குறித்து சிந்திக்க வேண்டியிருக்கிறது.

தமிழில் வீரத்திற்கும்- அறிவிற்கும் இடையில் செயலுக்கும்- அறிவிற்கும் இடையில் மகத்தான சமன்பாடுகள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. தமிழ்த் தேசிய பாரம்பரியத்தைப் பொறுத்தவரையில் ஆரம்ப கால மிதவாதிகளிடமிருந்து தொடங்கி இப்போதுள்ள மிதவாதிகள் வரையிலுமான சுமார் அரை நூற்றாண்டுக்கும் மேலான காலப்பகுதியில் அறிவுக்கும்- செயலுக்கும் இடையில் அல்லது அறிவுக்கும்- வீரத்திற்கும் இடையில் வெற்றிகரமான ஒரு பிரயோகச் சமநிலை கண்டுபிடிக்கப்படவே இல்லை.

இது விடயத்தில் தமிழ் மிதவாதிகள் மட்டுமல்ல, ஆயுதமேந்திய இயக்கங்களும் கூட தமக்குரிய சிந்தனைக்குழாம்கள் குறித்து தீவிரமாக சிந்தித்திருக்கவில்லை. சில இயக்கங்களில் அறிவுஜீவிகள் உறுப்பினர்களாக அதாவது, **ஓர்கானிக் இன்ரலெக்ஸ்ஸுவலாக** இருந்திருக்கின்றார்கள். இதில் சிலர் பின் நாட்களில் தலைமைத்துவத்தோடு முரண்பட்டுக்கொண்டு வெளியேறியுமிருக்கிறார்கள். ஆனால், எந்தவொரு இயக்கத்திடமும் பிரகாசமான ஒரு முன்னுதாரணம் என்று சொல்லத்தக்க *(திங் ராங்) சிந்தனைக் குழாம்* வளர்ச்சியடைந்திருக்கவில்லை.

குறிப்பாக, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை அதன் அரசியல் ஆலோசகராக அன்ரன் பாலசிங்கம் இருந்தார். தமிழர் தரப்பில் ஓரளவிற்கு அரசுடைய தரப்பாகவும் த.வி.பு இயக்கம் இருந்தது. **இந்த இயக்கம் ஒரு அரை அரசை நிர்வகித்தது. ஆனால், அன்ரன் பாலசிங்கத்தின் தலைமையிலோ அல்லது அமைப்பிற்கு வெளியிலோ சிந்தனைக் குழாம் என்று வர்ணிக்கத் தக்க வளர்சி எதுவும் அங்கிருக்கவில்லை. குறிப்பாக, ரணில் -பிரபா உடன்படிக்கை காலத்தில் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ்த் தேசிய ஆதரவாளர்களான புத்திஜீவிகள் மற்றும் மூளை உழைப்பாளிகளுக்கும வன்னிக்கும் இடையிலான இடை ஊடாட்டங்களின் விளைவுகளில் ஒன்றே இடைக் கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபு ஆகும்.** ஆனால், ஈழப்போரின் இறுதிச் சமாதான முயற்சிகளின்போது திறக்கப்பட்ட கதவுகளின் வழியாக நிகழ்ந்த இடை ஊடாட்டங்களின் தொடர்ச்சியைத் தக்க வைக்கும் ஒரு அத்தியாவசிய பொறிமுறையாகவும் ஒரு சிந்தனைக் குழாத்தை உருவாக்குவது பற்றி சிந்திக்கப்படவேயில்லை. ஒரு சிந்தனைக் குழாத்துக்குரிய வெற்றிடத்தைப் பேணியபடியே தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. தோல்விக்கு அந்த வெற்றிடமும் ஒரு காரணமாகவும் இருக்கக்கூடும்.

இப்பொழுது ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டபின் மேலெழுந்திருக்கும் மிதவாதிகளும், அந்த வெற்றிடத்தை பேணி வருவதைக் காணமுடிகிறது. இவ்வாறாக கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக தமிழ்த் தேசிய அரசியலானது தனக்கென ஒரு சிந்தனைக் குழாத்தை உருவாக்க முடியாமல் போனதற்குரிய காரணங்கள் எவை?

மூன்று பிரதான காரணங்களைக் கூற முடியும்.

முதலாவது, தமிழர்கள் ஒரு அரசற்ற தூரப்பாக இருப்பது


இரண்டாவது, நாட்டில் பிரயோகத்திலிருக்கும் கல்வி முறையின் தோல்வி.

மூன்றாவது, தமிழ்த் தேசியத்தின் உள்ளடக்கப் போதாமை.

இம்மூன்று காரணங்களும் ஒன்று மற்றதுடன் தொடர்புடையவை. ஒன்று மற்றதின் விளைவாக உருவானவை. நாட்டில் பிரயோகத்தில் உள்ள கல்வி முறையானது அதிக பட்சம் சுயநல மையக் கல்விமுறை என்பது ஒரு பொதுவான விமர்சனமாகும். அக்கல்வி முறையானது தன் சமூகம் சார்ந்து, சிந்திக்கின்ற அர்ப்பணிப்பும், தியாக சிந்தையுமுடைய மூளை உழைப்பாளிகளை உருவாக்குவதில் போதிய வெற்றியைப் பெறவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. சமூகத்துக்கு வெளியில் இருக்கும் எஜமானர்களுக்கு சேவகம் செய்யும் அல்லது அவர்களுடைய அலைவரிசையில் சிந்திக்கும் ஒரு அறிவியல் ஒழுக்கத்தையே இக்கல்வி முறையானது உருவாக்குவதால் அத்தகைய ஒழுக்கத்தைக் கொண்ட புத்திஜீவிகள் தமது சமூகத்திற்கு அர்ப்பணிப்போடு சேவையாற்ற முன்வருவதில்லை என்பதும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

சிங்கள மக்கள் அரசாங்கத்திற்கு ஆதரவான சிந்தனைக் குழாம்களில் செயற்பட முடிகிறது. அதில் அவர்களுக்குப் பாதுகாப்பும் புகழும் அரசபோகங்களும் கிடைக்கும்; பதவி உயர்வு, மேற்படிப்புக் குறித்த உத்தர வாதங்களும் உண்டு.

ஆனால், அரசற்ற தரப்பாகிய தமிழர்களைப் பொறுத்தவரை தமிழ்த்தேசிய ஆதரவாளராக இருப்பது சில சமயங்களில் உயிராபத்தானது. அத்தோடு பதவி உயர்வு மேற்



படிப்பு போன்றவற்றிற்கும் அரசாங்கத் தையே சார்ந்திருக்கவேண்டும். ஆகக்கூடிய பட்சம் அரசியல் நீக்கம் செய்யப்பட்ட அறிவியல் ஒழுக்கத்தை உடையவர்களாக தங்களைக் காட்டிகொள்வதன் மூலம் தமது நிலையான நலன்களை பாதுகாப்பதற்ககே பெரும் பாலான தமிழ் புத்திஜீவிகள் முயல்வ தாக ஒரு கருத்தும் உண்டு. இது காரணமாக தம் சமூகத்தை சார்ந்து அர்ப்பணிப்புமிக்க முடிவுகளை எடுக்கத் தயாரற்ற அறிவுஜீவிகள் தமிழ்த் தேசியத்திற்கான சிந்தனைக் குழாம் ஒன்றை உருவாக்க பின்னடிக்கின்றார்கள். இதில் மிக அரிதான புறநடைகளே உண்டு. இந்த இடத்தில்தான் தமிழ் அறிவும் - செயலும் ஒன்று மற்றதை இட்டு நிரப்புவதில் தடைகள் ஏற்படுகின்றன. இது காரணமாகவே ஆயுதமேந்திய தமிழ் இயக்கங்கள் அறிவு ஜீவிகளை கந்தகாரர்கள் என்றும் சாகப்பயந்தவர்கள் என்றும் வர்ணிக்கும் ஒரு நிலையும் காணப்பட்டது. மேலும் தமிழ்த் தேசியத்தின் அடித்தளமானது இனமானம் மொழிமானம் போன்ற உணர்ச்சிகரமான அம்சங்களால் வனையப்பட்டிருந்த ஒரு பின்னணியில் அதை அதிக பட்சம் அறிவு பூர்வமான விஞ்ஞான பூர்வமான அம்சங்களால் பிரதியீடு செய்யமுற்பட்டபோது ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் காரணமாகவும் தமிழ் புத்திஜீவிகளில் ஒரு பகுதியினர் ஆயுதப் போராட்டத்தை நெருங்கிச் செல்லத் தயங்கினர்.

மேற்சொன்ன காரங்களின் விளைவாக தமிழ்ப் புத்திஜீவிகளிற் கணிசமான தொகையினர் ஒருவித தற்காப்பு நிலைப்பட்ட முடிவுகளையே எடுத்தனர். எவ்வளவுக்கெவ்வளவு அவர்கள் தற்காப்பு நிலைப்பாட்டைச் சிந்தித்தார்களோ அவ்வளவுக்கவ்வளவு தீவிர தமிழ்த் தேசியவாதத்திலிருந்தும் விலகி நிற்க முற்பட்டார்கள். இதனால், தமிழ்த் தேசியத்திற்கான ஒரு சிந்தைனைக் குழாம் உருவாக முடியாது போயிற்று.

ஆனால், இப்பொழுது ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டு நான்கு ஆண்டுகளாகிவிட்ட பின்னரும் தமிழ்த் தேசியத்திற்கான சிந்தனைக்குழாம் ஒன்றைக் குறித்து சம்பந்தப்பட்ட, எந்த ஒரு தரப்பும் தீவிரமாக சிந்திப்பதாகத் தெரியவில்லை. இலங்கைத் தீவில் அப்படியொரு சிந்தனைக் குழாத்தை உருவாக்கத் தடையாக காணப்பட்ட காரணிகள் இப்பொழுதும் பலமாகத்தான் காணப் படுகின்றன.

ஆனால், போதியளவு ஜனநாயக வெளிக்குள் போதியளவு நிதிப்பலத்தோடும், தொடர்புகளோடும் காணப்படும் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் அதாவது, புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் நிலைமை அவாறில்லை. இதுவிடயத்தில் புலம்பெயர் தமிழச் சமூகத்தால், ஒரு முன்னோடிப் பாத்திரத்தை வகிக்க முடியும். ஒரு தமிழ்ச் சிந்தனைக்குழாத்தை உருவாக்கத் தடையாகக் காணப்படும் இரு பிரதான காரணிகள் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் இல்லை. முதலாது- ஒரு அரசற்ற தரப்பாக இருந்து சிந்திப்பதிலுள்ள ஆபத்துக்கள் அங்கில்லை. இரண்டாவது- இலங்கைத் தீவின் கல்விமுறைக்கு வெளியே சென்று சிந்திக்கத் தேவையான அளவுக்கு மேற்கத்தேய கல்விமுறைக்கூடாக உருவாக்கப் பெற்ற பல அறிவு ஜீவிகள் முதலாம் தலைமுறை புலம்பெயர் தமிழ்ச் சமுகத்திலும் உண்டு. இரண்டாம் தலை முறை புலம் பெயர் தமிழ்ச் சமூகத்திலும் உண்டு.

எனவே, ஒரு சிந்தனைக் குழாத்தை உருவாக்கத் தேவை யான அதிக பட்ச அனுகூலமான அரசியல், சமூக பொருளாதார மற்றும் அறிவியல் சூழல் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் தான் உண்டு.

புலம்பெயர்தமிழ்ச் சமூகம் எனப்படுவது, தமிழ்த் தேசியத்தின் மேற்குமயப்பட்ட ஒரு கூறாகும். ஒப்பீட்டளவில் விசாலமான ஜனநாயக சூழலில் வாழும் புலம்பெயர் தமிழ்ச் சமூகதிற்கே ஜனநாயகத்தின் ருசி மிகத் தெரியும். ஜனநாயகத்தின் அருமை அதிகம் தெரிந்த புலம்பெயர் சமூகம் தான் அதை மற்றவர்களோடு பகிர முன்வரவேண்டும். இந்த அடிப்படையிற் கூறின் தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக அடிக் கட்டுமானத்தை பலப்படுத்த வேண்டிய பொறுப்பும், அதற்குத் தேவையான வழங்களும் பின்னணியும் புலம்பெயர் தமிழச் சமூகத்திற்கே உண்டு. எனவே, தமிழ்ச் சிந்தனைக்குழாம் அல்லது தமிழ் அறிவியல் நடுவம் எனப்படுவது, முதலில் புலம் பெயர் தமிழ்ச் சமூகத்திலிருந்தே தொடங்கப்பட வேண்டும். தமிழ்த்தேசியத்தின் ஜனநாயக அடித்தளத்தை பலப்படுத்துவதற்கான, தவிர்க்கப்படவியலாத ஒரு பங்காளியாக புலம்பெயர் தமிழச் சமூகமே இருக்கும். அது புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் தேசியக் கடமையும் கூட. ஏனெனில், தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக அடித்தளத்தை பலப்படுத்துவதன் மூலம் தான் ஈழத்தமிழர்கள் தமது இறந்தகா லத்தின் நற்கனிகளை பாதுகாக்கலாம். தோல்விகளற்ற ஒளிமிகுந்த எதிர்காலமொன்றையும் கட்டியெழுப்பலாம்.

-குளோபல் தமிழ் நியூஸ் நெற்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடைநாசினிகளின் தடையும் பயிர் மற்றும் சூழல் பாதுகாப்பு மையத்தின் அவசியம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 25-VII

சென்றவாரத் தொடர்ச்சி...


இதில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பங்களிப்பு கணிசமானது. இந்த நிலைக்குள் நாமும் வடபகுதியில் ஆய்வு செய்பவர்களுக்கு உற்சாகமளிப்பதும் அதற்கான அத்திபாரத்தை வழங்குவதும் அவசியமாகும். விவசாயபீடம் இந்த வகையில் பல விடயங்களைத் திட்டமிட்டு செயற்படுத்த இனி ஆரம்பிக்கும். இந்த நல்ல செய்தியை அறியும் அனைவரும் எம்முடனிணைந்து இந்த முயற்சிக்குக் கைகொடுக்கலாம். பட்டதாரியாக உருவாகும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆய்வு செய்வதற்கான அறிவு வழங்கப்பட வேண்டும். அவர்களை பின்பு பணிபுரியும் போதும் ஆராய்ச்சியிலீடுபட ஊக்குவிக்க வேண்டும். இதன்மூலம் அதி களவிலான ஆராய்ச்சியாளர்களை நாம் உருவாக்க முடியும். பல்கலைக்கழக நிலையையும் கடந்து பாடசாலையிலேயே முனைப்புப் பெற்றிருக்கின்ற ஆராய்ச்சித் திட்டத்தை நாம் இன்னும் விரிவுபடுத்தலாம்.

வெறுமனே விவசாயக் கற்கைநெறியுடன் விவசாயபீடம் மட்டுப்படுத்தப்படாது. எமது நோக்கமான விவசாயத்தை மேம்படுத்தல், விரிவாக்கல், சந்தைப்படுத்தல், பேண்தகு விவசாயம் மற்றும் இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் இன்னும் விவசாய கல்வியை, அதன் வளர்ச்சியை உலக தரத்திற்கு உயர்த்துதல் என்பதை செய்கையினால் செய்து காட்டும் நிலைக்குள் நாம் வந்திருக்கின்றோம். விவசாய பீடத்தின் சொந்த நிலப்பரப்பினுள் நாம் காலடியெடுத்து வைக்கும் நாளை விரைந்து எதிர்பார்த்திருக்கும் நிலையிலும் விவசாய பீடத்தின் மனிதவளம், ஆய்வுத்திறன் மற்றும் அதற்கான ஆய்வுகூட வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பும் கிடைத்திருப்பது பல ஆண்டுகள் விவசாயபீடம் செய்த அஞ்ஞான வாதத்தின் பலனாகும்.


அழுகலுக்குள்ளான வெங்காயம்

விவசாய பீடத்தின் பங்களிப்பு கல்வி கற்றல் என்ற வரையறையையும் தாண்டி எமது பிரதேசத்திற்கான ஆராய்ச்சி மற்றும் விவசாயத்திலீடுபடும் அனைவருக்கும் தேவையான பயிற்சிகள், வாழ்வாதாரத்தை தேடியலையும் மக்களுக்கான வழிமுறைகளைப் பரிந்துரைக்கும் தளமாக அனைவருக்கும் நஞ்சற்ற உணவு, அதனுடன் விவசாயத்திலீடுபடுபவர்களை ஊக்குவித்தலும் இன்னும் எமது உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உலகத்தரம் வாய்ந்த உற்பத்திப் பொருட்களை மதிப்பேற்றஞ் செய்து உலக சந்தைக்குள் உள்வாங்கச் செய்தல் என்பனவற்றை மையப்படுத்தி அமையும்.

விவசாயபீடமும் பொறியியல் பீடமும் ஒருங்கே கிளிநொச்சியில் அமையவிருப்பது பல்வேறு துறைசார்ந்த கற்கைநெறிகளுக்கும் வழிவகுக்கும்.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

இவ்விரண்டு பீடங்களும் இணைந்து தனியார் தொழிற்றுறையை ஊக்குவிக்கும் புதிய இணைந்த கற்கைநெறிகளை உருவாக்க வேண்டும். அதில் படித்து வெளியேறும் மாணவர்கள் சுயமாக தொழிலை ஆரம்பிக்கும் தன்னம்பிக்கையும் அதுசார்ந்த அறிவும் இருக்க வேண்டும். வெளியேறும் பட்டதாரி மாணவர்கள் தனியான தொழிலை ஆரம்பிக்கவும் தாம் செய்யும் தொழில் ரீதியாக புதிய இலகு தொழில்நுட்பத்தை உருவாக்கி இன்னும் உள்வாங்கிபுதியனவற்றை உருவாக்க பிறந்திருக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டில் வழிபிறக்கும் என நம்புவோமாக. (முற்றும்)

# மும்மொழிக் கொள்கை அமுலாக்கல் திட்டம்

(மல்லாவி)

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையேயான மும்மொழி அமுலாக்கல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. வடமாகாணத்தில் முதல் நிகழ்வாக துணுக்காய் கல்வி வலயத்தில் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய இத்திட்டம் நேற்று துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் தலைமையில் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆரம்பித்து வைத்தார். இம் மும்மொழி அமுலாக்கத் திட்டம் இனங்களுக்கு இடையேயான நல்லுறவைப் பேணுமுகமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதில் தாய்மொழியான தமிழ்மொழியுடன் இரண்டாம் மொழியான சிங்கள மொழியையும் சர்வதேச ஊடகமொழியான ஆங்கில மொழியையும் கற்பிக்கின்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேற்குறித்த கல்வி வலயத்தில் இரண்டாம் மொழியான சிங்கள மொழியைக் கற்பிப்பதற்கு இராணுவப் படைப்பிரிவில் இருந்து லெப்டினன் மகேஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (அ-15)

# இலங்கையர் இருவரை காப்பாற்றிய சவுதியர்

(கொழும்பு)

சவுதி அரேபிய சிறையில் இருந்து இரு இலங்கைப் பணியாளர்களை மீட்டு நாட்டுக்குத் திருப்பி அனுப்ப சவுதி அரேபியர் ஒருவர் 22 ஆயிரம் சவுதி றியால்களை வழங்க முன்வந்துள்ளார்.

சவுதி அரேபிய வீடொன்றில் பணி புரிந்த இரு இலங்கையர்கள் தங்களது பணி இடத்திலிருந்து தப்பிச் சென்று சவுதி தூதரகத்தில் தஞ்சம் புகுந்து தம்மால் மீண்டும் பணிக்குச் செல்ல முடியாது என அவர்கள் தெரிவித்திருந்தனர். இது குறித்து றியாத் பொலிஸார் விசாரணைகள் நடத்திய போதும் இவர்கள் இருவரும் பணிபுரிந்த இடத்தை அடயாளம் காண முடியவில்லை. எனினும் இவர்கள் சவுதியில் பணி புரிவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று பணிகளைச் செய்யத் தவறியதால் ஒவ்வொருவருக்கும் தலா 11 ஆயிரம் சவுதி றியால் அறவிடப்பட்டது. அந்தப் பணத்தை செலுத்த முடியாது சிறையில் இருந்த நிலையிலையே சவுதி அரேபியாவைச் சேர்ந்த நபர் ஒருவரால் மீட்கப்பட்டுள்ளார். (அ-2)

# பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடக்குமா?

## பரிசீலிக்க கோருகிறது சட்டப் பேரவை

இலங்கையின் பொதுநலவாய நாடுகள் அமர்வினை நடத்துவது குறித்து மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென சர்வதேச சட்டத்தரணிகள் பேரவையின் மனித உரிமை நிறுவகம் தெரிவித்துள்ளது. அமர்வு களை நடத்துவது குறித்து இறுதித் தீர்மான த்தை எடுக்கும் அதிகாரம் அமைப்பிற்கே காணப்படுகின்றது என சர்வதேச சட்டத் தரணிகள் பேரவையின் மனித உரிமை நிறுவகத்தின் உறுப்பினர் சட்டாட் கட்கரி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொதுநலவாய நாடுகள் அமர்வினை நடத்துவது பொருத்தமானதா என்பது குறித்து உறுப்பு நாடுகள் மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள், கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனை கவனிக்க வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கையில் இந்த அமர்வுகளை நடத்துவதன் மூலம் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டதாக அர்த்தப்படும் எனவும் இது மிகவும் ஆபத்தானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மெழுகுவர்த்தி போராட்டத்திற்கு ஆளும் கட்சியினர் சிலர் ஆதரவு

(கொழும்பு)

நாடாளுமன்றில் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் தமக்கு ஆதரவளித்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாடாளுமன்றில் மெழுகுவர்த்தி போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்திற்கு ஆளும் கட்சியின் சிலர் தாக்குதல் நடத்தினர். எனினும் பலர் இந்தப் போராட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிடவில்லை.

மெழுகுவர்த்தி போராட்டத்திற்கு எதிராக சில ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீரை வீசினர்.

மக்களுக்காக துப்பாக்கிச் சூட்டைக் கூட தாங்கிக் கொள்ள முடியும். ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறுபிள்ளைகளைப் போன்று செயற்பட்டனர்.

மின்சாரக் கட்டண உயர்வு குறித்து பவித்ராவையோ சம்பிக்க வையோ திட்டுவதில் அர்த்தமில்லை. இந்த அரசாங்கமே மின்சாரக் கட்டண உயர்விற்கு காரணம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் பொருளாதார நலன்கள் சவப்பெட்டிக்குள் வைப்பு

## வலி. வடக்கு காணி சுவீகரிப்பு தொடர்பில் சகாதேவன் கருத்து

(பூந்தோட்டம்)

கடந்த மூன்று தசாப்த காலமாக மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழர் விடயத்தில் மட்டும் தீங்கிழைத்தல் என்ற ஒரே கொள்கையினையே கடைப்பிடித்து வருகின்றமையை வலிகாமத்தில் காணி சுவீகரிப்பு எடுத்துக்காட்டுவதாக போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் வீ.சகாதேவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள போராட்டத்திற்கு அறை கூவல் விடுத்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

1990 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தினைத் தொடர்ந்து அதே ஆண்டு ஆனி மாதம் 12ஆம் திகதி முதன் முதலாக வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் கிழக்கின் ஒரு சில பகுதிகளில் இருந்த தமிழ் மக்கள் 2ஆம் கட்ட ஈழப்போராட்டத்தினை ஆரம்பிக்கும் நோக்குடன் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டனர்.

வெளியேற்றப்பட்ட பொதுமக்கள் தென்மராட்சி, வடமராட்சி வடக்கு, வலிகாமம் கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனார்.

அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் வலிகாமம் வடக்கின் முழுப் பகுதிகளும் காங்கேசன் துறைமுகம்,பலாலி இராணுவத்தளம் ஆகியவற்றின் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு தீபாவளி தினத்தன்று பறித்தெடுத்து தமிழ் மக்களை வலி. வடக்கிலிருந்து முழுமையாக விரட்டியடித்த துயரத்தை தீபாவளி பரிசாக வழங்கினார்கள்.

கடந்த 23 வருடங்களாக இப் பகுதியிலிருந்து வெளியேறிய மக்களில் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றவர்களைத் தவிர மீதிப் பேர் முகாம் வாழ்க்கையினையும் சிலர் வாடகை குடியிருப்பாளர்களாகவும் இதுவரை வசித்து வருகின்றார்கள்.

யாழ்.குடாநாட்டின் 10% நிலப்பரப்பை கொண்ட வலி.வடக்கின் அரைவாசிக்கு மேற்பட்ட அதாவது 6 ஆயிரத்து 500 ஏக்கர் காணியை அரசாங்கம் சுவீகரித்துள்ளது. இது யாழ்.மாவட்டத்தின் அதிக செழிப்பான விவசாயக் காணிகளை உள்ளடக்கிய பிரதேசமாகும். அதனையும் விட ஒட்டுமொத்த இலங்கைக்கான மீன் உற்பத்தியில் அதிகூடிய பங்களிப்புச் செய்த மயிலிட்டியும் அதனை சூழ்ந்த வளமான கடற்கரை பிரதேசமும் இதனுள் அடங்குகின்றது.

குடாநாட்டு மக்களின் வாழ்விடப் பரப்பளவில் 10 % வலிகாமம் வடக்கில் அடங்குகின்றது. யாழ்.குடாநாட்டின் செழிப்பான விவசாய நிலப்பரப்பில் 50% இற்கு மேல் இப்பகுதியிலேயே உள்ளது. யாழ்.குடாநாட்டின் கடல் வள வருமானத்திலும் ஏறத்தாள 75% இற்கு மேல் வலிகாமம் வடக்கு பிரதேசம் பங்களிப்பு செய்துள்ளது. இப் பகுதி காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் மூலம் பலாலி விமான நிலையம், காங்கேசன் துறைமுகம், ரயில் நிலையம் என்பவற்றினால் அப்பகுதி மக்களுக்கு கிடைக்கக் கூடிய பொருளாதார நன்மைகள் அனைத்தும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த சுவீகரிப்பு நடவடிக்கை மூலம் வலிகாமம் வடக்கு மக்களின் எதிர்காலம் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பொருளாதார நலன்களும் இன்று சவப்பெட்டிக்குள் வைக்கப்பட்டுவிட்டது.

எனவே, இதனை தட்டிக்கேட்காமல், தடுத்து நிறுத்தாமல் நாம் நமது உரிமையைப் பற்றி பேசுவதில் எள்ளளவும் பயன் இல்லை. 1983 ஆம் ஆண்டில் வெலிஓயா, 2013 இல் வலிகாமம் என்று தமிழ் மக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள். வலிகாமம் மக்களின் காணி சுவீகரிப்பு செய்யும் அரசாங்கத்தின் நோக்கத்தினை நாம் முற்று முழுதாக நிராகரிப்பதுடன், இவ்விடயம் தொடர்பாக வலிகாமம் வடக்கின் சமூக பிரதிநிதிகளிடம் உடனடியாகப் பேசி ஒரு முடிவிற்கு வரும்படி அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றோம்.

வலி. வடக்கு மக்களின் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான தொடர் போராட்டத்தினை நடத்துவதற்கு வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இந்த அழைப்பினை அனைவரும் ஏற்று 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் ஒன்று கூடுமாறும் இறுதித் தீர்மானம் ஒன்றினை மேற்கொள்வதற்கு அணிதிரளுமாறும் அனைவரையும் அழைக்கின்றோம் என அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ.2-266)

## 3 மாதங்களில் 9 பேருக்கு எச்.ஐ.வி.தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கடந்த மூன்று மாதங்களில் எச்.ஐ.வி.தொற்றுக்கு இலக்காகி 9 பேர் உயிரிழந்துள்ளதாக இலங்கை தேசிய எயிட்ஸ் ஒழிப்பு நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் 44 பேர் எயிட்ஸ் நோயாளர்கள் என்று இனங் காணப்பட்டுள்ளனர்.

மேலும் எச்.ஐ.வி. பாதிப்புக்கு உள்ளான 646 பேர் இனங்காணப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## இலவசக் கணனிக் கற்கை

(யாழ்ப்பாணம்)

E-Transition, (Pvt) Ltd நிறுவனத்தில் அரசாங்கத்தினால் நடத்தப்படும் முற்றிலும் இலவசமான ASAP கணனிக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுவதாக இந் நிறுவனப் பணிப்பாளர் எம். சரவணன் அறிவித்துள்ளார்

இக்கற்கை நெறிக்கு க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றி விண்ணப்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்குரிய பதிவுகளை E-Transition, இல.166/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள இந் நிறுவனத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் கல்விச் சான்றிதழ்களுடன் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இதற்கான பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நாடாளுமன்றில் மக்கள் கருத்துக்கும் இடமில்லை

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடாளுமன்றில் மக்களின் கருத்துக்களுக்கு இடமில்லை என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் கருத்துக்களை வெளியிடும் உரிமை கூட முடக்கப்படுகின்றது.

குறைந்தபட்சம் பெரதுமக்களின் சார்பில் வாக்குகளைப் பயன்படுத்தக் கூட சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

சாதாரண பொதுமக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் பல்வேறு சட்டங்களை அரசாங்கம் நாடாளுமன்றில் அறிமுகம் செய்துள்ளது.

எமது கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாதிருக்கலாம். எனினும் , மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தை வழங்க வேண்டும்.

இந்நாடாளுமன்றில் ஜனநாயகம் கிடையாது. அதனை அடையாளப்படுத்தும் நோக்கிலேயே எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேசையின் மீது ஏறி எதிர்ப்பை வெளியிட்டோம்.

நாடாளுமன்றை இழிவுபடுத்துவது எமது நோக்கமல்ல. நாடாளுமன்றில் ஜனநாயகம் கிடையாது என்பதனை உணர்த்துவதே எமது இலக்கு என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நாட்டை ஆட்சி செய்வதற்கு 700 கோடி ரூபா ஒதுக்கீடு

## சரத் பொன்சேகா குற்றச் சாட்டு

மக்கள் மீது சுமைகளைத் திணிப்பது பொருளாதார வளர்சியாகாது என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாரம்பல நெலல்ல பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ,

தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு மின்சாரக் கட்டணம் அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது. குறைந்தளவு மின்சாரத்தைப் பயன்படுத்துவோரே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த காப்பெற் இடப்பட்ட பாதைகளை கடக்கும் போது எமக்கு சிரிப்பு வருகிறது.

ஏனெனில் , இந்தப் பாதையின் ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் 50 மில்லியன் ரூபா தரகுப் பணத்தை ஆட்சியாளர்கள் பெறுகின்றனர்.

நாட்டின் சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கு ஏழாயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டும் அதே வேளை, நாட்டை ஆட்சி செய்பவரின் செலவுக்காக 700 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான ஓர் நிலைமையில் எவ்வாறு நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும்?

நீங்கள் அணிந்துள்ள ஆடைகளையும் உங்களையும் பார்க்கும் போது நாட்டின் பொருளாதாரம் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

கப்பல்கள் செல்லாத துறைமுகம் அமைக்கப்பட்டது, விமானம் செல்லாத விமான நிலையம் அமைக்கப்பட்டது, கட்டு நாயக்காவிலிருந்து பறக்கும் ஸ்ரீலங்கன் விமானம் , மத்தளவில் இறக்கப்பட்டு எரிபொருள் ஏற்றப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)



சண்டிலிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப் போட்டி அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. இவ்விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான கபடிப் போட்டியில் வெற்றிபெற்ற இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியினரையும் பெண்களுக்கான கபடிப் போட்டியில் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்ட இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட அணியினரையும் படங்களில் காணலாம் .

(படங்கள்: - மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலி நாட்டில் பொதுத் தேர்தல்; படையை குறைக்க பிரான்ஸ் முடிவு



எதிர்வரும் ஜூலை மாதம் மாலி நாட்டின் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல் நடக்கவுள்ள நிலையில் பிரான்ஸ் நாடு இந்த மாதம் முதல் தனது படைவீரர்கள் 4 ஆயிரம் பேரையும் படிப்படியாக விலக்கிக் கொள்ள முடிவெடுத்துள்ளது.

மேற்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த மாலி நாட்டில் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் இஸ்லாமியப் புரட்சியாளர்களுக்கும் அரசுப் படையினருக்கும் தொடர்ந்து மோதல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த ஆண்டு மார்ச் மாதம் ஜனாதிபதி அமாடோவ் துமானியின் ஆட்சி கவிழ்ந்த பின் சாதகமாக்கிக் கொண்ட இஸ்லாமியப் புரட்சிப் படைகள் மாலியின் வடக்குப் பகுதியைத் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

தொடர்ந்து டிம்பக்டு, கிடால், காவோ போன்ற நகரங்கள் அவர்களால் கைப்பற்றப்பட்டன. 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மாலியின் இடைக்கால ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க பிரான்ஸ் தேசம் தனது இராணுவத்தினரை அரசிற்கு உதவி புரிய அனுப்பி வைத்தது. பிரெஞ்சுப் படையினர் அரசு இழந்த நகரங்களை மீட்டுத் தந்ததோடு ஆட்சிக்கும் துணை புரிந்தனர்.

ஆபிரிக்காவின் பாலைவனப் பகுதிகளில் பயிற்சி பெற்ற சாட் படையினரும் தங்கள் வீரர்களை விலக்கிக் கொள்ளும் நிலையில் ஐ.நா. ஒரு அமைதிப்படையை இங்கு நிறுவ வேண்டுமென பிரான்ஸ் அரசு கோரிக்கை விடுத்திருந்தது. இதனை ஏற்றுக் கொண்ட ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பு 11 ஆயிரத்து 200 இராணுவ வீரர்களும் ஆயிரத்து 440 பொலிஸ் துறையினரும் அடங்கிய தனது அமைதிப்படை ஒன்றை மாலிக்கு அனுப்பவிருக்கின்றது. மினுஸ்மா என்று அழைக்கப்படவிருக்கும் இந்த அமைப்பிற்கு பிரான்ஸ் தேசத்து வீரர்களும் துணைபுரிவார்கள். இதற்காகும் செலவு ஆண்டிற்கு 800 மில்லியன் டொலர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. (அ-2)

# மனநல மருத்துவமனையில் மின் கசிவினால் தீ விபத்து

ரஷ்யாவின் மொஸ்கோ பகுதியில் உள்ள ரன்மேஸ்கி என்ற கிராமத்தில் இயங்கி வந்த மனநல வைத்திய சாலையில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நோயாளிகள் இருந்த பகுதியில் தான் தீ பரவியுள்ளது. அந்த சமயத்தில் நோயாளிகள் அனைவரும் தங்கள் படுக்கையறையில் இருந்துள்ளனர். ஜன்னல்களிலும் தடுப்புக் கம்பிகள் இருந்துள்ளதால் யாரும் தப்பி ஓடியதாகத் தெரியவில்லை.

தீயணைப்புத் துறையினர் அவ்விடத்துக்கு விரைந்து தீயை அணைத்த பின் தீயில் கருகிய 12 உடல்களை மீட்டுள்ளனர். இங்கு சிகிச்சை பெற்றுவந்தவர்களில் பெரும்பான்மையானோர் உள்ளூர்வாசிகள் ஆவர்.

தற்சமயம் மொத்தம் 41 நோயாளிகள் சிகிச்சை பெற்றுவந்ததாகக் கூறப்படுகின்றது, எனவே, குறைந்தது 36 நோயாளிகளாவது இந்த விபத்தில் இறந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. சுமார் இரண்டு மணி அளவில் ஏற்பட்ட இத்தீவிபத்துக்கு மின்கசிவு காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆயினும் விபத்துக்கான காரணங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. (அ-2)

# குவாண்டனாமோ சிறையில் 92 கைதிகள் உண்ணாவிரதம்

கியூபாவில் அமெரிக்காவுக்குச் சொந்தமாக உள்ள குவாண்டனாமோ இராணுவ சிறையில் அடைக்கப்பட்டுள்ள விசாரணைக் கைதிகளில் 92 பேர் உண்ணா விரதத்தை மேற்கொண்டு வருகின் றனர்.

இந்தச் சிறையில் சுமார் 166 கைதிகள் அடைக்கப்பட்டுள்ள நிலையில் தாங்கள் காரணமின்றி குற்றச்சாட்டுக்கள் இல்லாமல் தம்மீது சட்டபூர்வ விசாரணை நடத்தப்படாமல் கடந்த 11 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் தங்களை விடுவிக்க வேண்டும் எனவும் அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளதாக கைதிகள் தரப்பு சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே உண்ணாவிரதம் இருக்கும்கைதிகளில்17 பேருக்குமூக்கு வழியாக குழாயை செலுத்தி கட்டாயப்படுத்தி உணவு அளிக்கப் பட்டதாகவும் சிறை அதிகாரி தெரிவித்தார்.


இரண்டு கைதிகள் நிலைமை மோசமாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் எந்த கைதிக்கும் உயிருக்கு ஆபத்து இல்லை என்றும் சிறை அதிகாரி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைதிகள் பெப்ரவரி 6 ஆம் திகதி உண்ணாவிரதத்தை தொடங்கியுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் எண்ணிக்கை, அதுபற்றிய தகவல் என்பவற்றை வெளியிடும் போது திட்டமிட்டு குறைத்து இராணுவம் தெரிவிப்பதாக கைதிகள் தரப்புச் சட்டத்தரணிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பெப்ரவரியிலிருந்து இப்போதைய நிலவரப்படி 130 பேர் உண்ணாவிரதத்தில் கல ந்து கொண்டுள்ளதாகவும் இரு கைதிகள் தற்கொலை முயற்சி மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# பெனாசீர் பூட்டோ கொலை தொடர்பில் முஷாரப்பிடம் எவ்.ஐ.ஏ விசாரிக்கும்

## பயங்கரவாத தடுப்பு நீதிமன்றம் அனுமதி





(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை வழக்கு விசாரணையில் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பையும் சேர்த்து அவரிடம் விசாரணை நடத்த மத்திய புலனாய்வு அமைப்புக்கு (எப்ஐஏ) பயங்கரவாத தடுப்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

பெனாசீர் கொலை வழக்கில் தனக்கு ஜா மீன் வழங்க வேண்டும் என்று கோரி முஷாரப் தாக்கல் செய்த மனுவை லாகூர் உயர் நீதிமன்றத்தின் ராவல்பிண்டி கிளை நிராகரித்த மறுதினம் எப்ஐஏ தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதை விசாரணைக்கு ஏற்ற பயங்கரவாத தடுப்பு நீதிமன்ற நீதிபதி ஹபீப் உர் ரஹ்மான் பேநசீர் கொலை வழக்கில் முஷாரப்பிடம் எப்ஐஏ விசாரிக்க அனுமதி வழங்கினார். இதையடுத்து முஷாரப்பிடம் விசாரணை நடத்தப்படும். அந்த விசாரணை துணைச் சிறைச்சாலையாக அறிவிக்கப்பட்டுள்ள முஷாரப்பின் வீட்டில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)




# விக்டோரியா மகாராணியின் காலுறைகள் ஏலத்திற்கு வருகின்றன

விக்டோரியா மகாராணி 1870 ஆம் ஆண்டில் பயன்படுத்திய ஒரு சோடிக் காலுறைகள் வடக்கு யார்க்ஸயரில் உள்ள லேபர்ன் பகுதியில் இருக்கும் டெனன்ட்ஸ் ஏல நிறுவனத்தால் ஏலம் விடப்படுகிறது. பட்டுத்துணியால் ஆன இந்த காலுறைகளில் விஆர் என்ற அரச முத்திரை நூல் வேலைப்பாடுடன் பதிவு செய்யப்பட்டிருக்கும். விக்டோரியா ராணி சில முறைகளே உபயோகிக்கும் இது போன்ற ஆடைகளை தன்னிடம் பணி புரிபவர்களுக்கும் தனக்குப் பிரியமானவர்களுக்கும் பரிசளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இதேபோல் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட பொருட்களே சில சமயங்களில் ஏலத்துக்கு வருகின்றன என்றும் இந்தக்காலுறைகள் 400 முதல் 600 பவுண்கள் வரை போகும் என்றும் ஏல நிறுவனத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

இந்தக் காலுறைகள் புதிய பொலிவுடன் காணப்படவில்லை. மேலும் நிறம்மங்கி அணிந்தால் கிழிந்துவிடும் என்ற நிலையில் உள்ள போதும் இதனுடைய வரலாற்று முக்கியத்துவத்தால் இந்த விலை கிடைக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். ராணியின் அனைத்து உடைகளிலும் அரச முத்திரையான வி ஆர் என்ற குறியீடும் இருக்கும் என்றும் ஏல நிறுவனத்தினர் தெரிவித்ளதனர். (அ-



சிங்கப்பூரில் எகிப்து நாட்டின் புராதன கண்காட்சி நடைபெற்று வருகின்றது. இக்கண்காட்சியில் 3000 ஆண்டுகளுக்கு முன்னைய ஆறு மம்மிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இதை இளம் பெண் ஒருவர் ஆர்வமாக பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

# இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பெருகிவரும் புற்று நோயாளிகள்

(வோஷிங்டன்)

இலத்தீன் அமெரிக்க நாடுகளில், புற்றுநோயால் தாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் எண்ணிக்கையை விட குறைவாக இருந்தாலும், இறப்பு விகிதம் அதிகரித்துக் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரேசில் நாட்டின் சாவ் பாலோ நகரில் நடைபெற்ற புற்றுநோய் பற்றிய சிறப்புக் கருத்தரங்கு ஒன்றிலேயே ஆய்வாளர்களால் இது குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பகுதிகளைச் சேர்ந்த ஆஜென்ரீனா, பஹாமாஸ், பொலியா, பிரேசில், சிலி, கொலம்பியா, கோஸ்டாரிகா, டொமினிகன் குடியரசு, ஈக்வடோர், குவாதமாலா, பிரெஞ்ச் கயானா, கயானா, ஹோண்டுராஸ், ஹைதி, மெக் சிக்கோ, நிகாராகுவே, பனாமா, பெரு, பொஸ்டாரிக்கா பராகுவே மற்றும் எல்சல்வடோர் ஆகிய நாடுகளில் உள்ள புற்று நோயாளிகளையும் அவர்களுக்குத் தரப்படும் சிகிச்சை முறைகளையும் ஆய்வு செய்து, அவற்றின் முடிவுகளை ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

இதன்படி நாடுகளின் பொருளாதார நிலை உயர்வடையும் போது, மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்வதால், அவர்கள் மேற்கத்தேய நாடுகளின் நாகரிக வாழ்க்கைப் பாணியைப் பின்பற்றுகின்றனர். உடல் உழைப்பில்லாத வாழ்க்கை முறைகளும் ஆரோக்கியக் கேடான விரைவு உணவுகளும் புகைப் பிடித்தல், மது போன்ற பழக்கங்களும் அவர்களை இந்நோய்க்கு உட்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோயின் அறிகுறிகள் தாமதமாகக் கண்டுபிடிக்கப்படுவதும் தகுந்த சிகிச்சைகளை மேற்கொள்ளாமல் இருப்பதும் இவர்களின் இறப்பு விகிதம் அதிகரிப்பதற்குக் காரணமாவதாகவும் இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் 2030 ஆம் ஆண்டில் இந்த நாடுகளில் இருக்கக்கூடிய புற்று நோயாளிகளின் எண்ணிக்கை 1.7 மில்லியனாக இருக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புற்றுநோய் காரணமாக ஒருமில்லியன்நோயாளிகள் இறக்கும் நிலை உருவாகக்கூடும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீன இராணுவம் ஊடுருவியதால் காஷ்மீர் எல்லையில் பதற்றம்

## சீனா விரைகிறார் சல்மான் குர்ஷித்

(புதுடில்லி)

சீன இராணுவம் ஊடுருவியதால் எல்லையில் பதற்றம் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் வெளியுறவு மந்திரி சல்மான் குர்ஷித் எதிர்வரும் மேமாதம் 9 ஆம் திகதி சீனாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### எல்லையில் பதற்றம்

காஷ்மீர் மாநிலம் லடாக் பிராந்தியத்தில் உள்ள தவுலத் பெக் ஆல்டி பகுதிக்குள் சீன இராணுவம் 10 கிலோ மீற்றர் தூரம் வரை அத்துமீறி ஊடுருவி கூடாரம் அமைத்துள்ளது. அங்கு சுமார் 50 சீன வீரர்கள் தங்கியுள்ளனர்.

எனினும் தமது இராணுவம் இந்திய பகுதிக்குள் ஊடுருவவில்லை எனவும் அது தமது பகுதி என்பதால் அங்கிருந்து திரும்பிச் செல்ல முடியாது என்றும் சீனா கூறி வருகிறது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக லடாக் பிராந்தியத்தின் இந்திய–சீன இராணுவங்களின் பிரிகேடியர் நிலையிலுள்ள அதிகாரிகள் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதனால் எல்லையில் மேலும் பதற்ற நிலை நீடித்து வருகிறது.

### சீனா செல்கிறார் குர்ஷித்

இந்நிலையில் வெளியுறவு மந்திரி சல்மான் குர்ஷித் எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி சீனாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். சீனாவின் புதிய பிரதமராக சமீபத்தில் பதவியேற்ற லீ கியாங் தனது முதல் வெளிநாட்டு சுற்றுப் பயணமாக விரைவில் இந்தியாவிற்கு வரவுள்ள நிலையில் இதற்கு முன்னர் சல்மான் குர்ஷித் சீனா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்கு சீன தலைவர்களை அவர் சந்தித்து பேசவுள்ளதாகவும் டில்லியில் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றுக்கு தீர்வு காண சில செயற்றிட்டங்கள் உள்ளன என்றும் அவற்றின் அடிப்படையில் ஊடுருவல் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும் அப்போது சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சீனா உள்ளிட்ட அனைத்து அயல் நாடுகளுடனும் நல்லுறவை மேம்படுத்த இந்தியா பாடுபட்டு வருவதாகவும் சில பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றுக்காக நட்புறவை முறித்துக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

### சீனா மறுப்பு

இதனிடையே இந்திய பகுதிக்குள் சீன இராணுவம் அத்துமீறி நுழையவில்லை என்றும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான எல்லை இன்னும் வரையறுக்கப்படவில்லை எனவும் சீன வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஹுவா சுன்யுங் நேற்று முன்தினம் பீஜிங் நகரில் நிருபர்களிடம் தெரிவித்திருந்தார்.



இந்தப் பிரச்சினையின் காரணமாக எல்லையில் அமைதியும் நிலைத்தன்மையும் பாதிக்கப்படாது என்றும் பரஸ்பர பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தமது இராணுவ உலங்குவானூர்திகள் இந்திய பகுதிக்குள் அத்துமீறி பறந்ததாக கூறப்படுவதையும் சீனா மறுத்திருக்கிறது. (அ-5)

## பிரதமரை இராஜினாமா செய்யக்கோரி எதிர்க்கட்சிகள் மீண்டும் அமளி

(புதுடில்லி)

பாராளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடரின் 2 ஆவது அமர்வு கடந்த வாரம் தொடங்கியது. ஆனால், 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு ஊழல், நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஊழல் போன்ற முறைகேடு தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங் பதவி விலக வேண்டும் என்று பாரதீய ஜனதா கோரி வருகிறது.


இதேபோல் ஏனைய எதிர்க்கட்சிகளும் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி வருகிறார்கள். இதனால் பாராளுமன்றத்தில் தொடர்ந்து அமளி ஏற்பட்டு அவை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி. மறைவால் பாராளுமன்றம் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது. நேற்றுக் காலை 11 மணிக்கு பாராளுமன்றம் கூடியதும் மீண்டும் எதிர்க்கட்சிகள் 2ஜி நிலக்கரி ஒதுக்கீடு ஊழல் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பினார்கள்.

பிரதமர் இராஜினாமா செய்ய வேண்டும் என்று பாரதீய ஜனதா எம்.பிக்கள் கோஷம் எழுப்பினார்கள்.

உ.பி. அமைச்சர் அசம்கான் அமெரிக்காவில் அவமரியாதை செய்யப்பட்டது தொடர்பாக சமாஜ்வாடி எம்.பிக்கள் பிரச்சினை எழுப்பினார்கள். இதனால் பாராளுமன்றத்தில் கூச்சல் அமளி ஏற்பட்டதைத் தொடர்ந்து சபை ஒத்தி வைக்கப்பட்டது.

இதேபோல் டில்லி மேல் சபையும் எம்.பிக்கள் அமளியால் ஒத்தி வைக்கப்பட்டது. (அ-2)



சட்டசபையில் கவனயீர்ப்பு தீர்மானத்திற்கு சபாநாயகர் அனுமதி அளிக்காததால் காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏக்கள் வெளிநடப்பு செய்வதைப் படத்தில் காணலாம்.

### பாரதச் செய்தி

## இந்தியர்களுக்கு தூதரகம் மூலம் உதவிகள் வழங்கப்படுகின்றன

வெளிநாடுகளில் அல்லற்படும் இந்தியர்களுக்கு இந்தியத் தூதரகம் மூலம் உதவி செய்யப்படுகிறது என்று டுபாயில் வெளிநாடு வாழ் இந்தியர் விவகாரத்துறை அமைச்சர் வயலார் ரவி தெரிவித்தார்.

டுபாயில் இந்திய கன்சுலேட் ஆதரவுடன் செயற்பட்டு வரும் இந்திய சமூகநல மையக்கூட்டம் கடந்த 12 ஆம் திகதி மூவன்பிக் ஹோட்டலில் நடைபெற்றது.

மத்திய அமைச்சர் வயலார் ரவி தனது சிறப்புரையில், சவுதி அரேபியாவிலும் ஐக்கிய அரபு அமீரகத்திலும் இந்தியர்கள் மிக அதிக அளவில் பணிபுரிந்து வருகின்றனர். வளைகுடாவைப் பொறுத்தவரை இந்திய பணியாளர்கள் சிறப்பிடத்தைப் பெற்று வருகின்றனர்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அனைத்து துறைகளிலும் ஒரு முக்கிய சக்தியாக விளங்கி வருகிறது. இதன் காரணமாக வளர்ச்சி விகிதம் அதிகரித்து வருகிறது. தற்போதைய சூழ்நிலையில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பொருளாதார மற்றும் அரசியல் சூழல்கள் மாறுபட்டு வந்தாலும் இந்தியாவைப் பொறுத்தவரை இவை ஸ்திரத்தன்மையுடன் இருந்து வருகிறது.

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. மக்களும் ஊடகங்களும் எவை குறித்தும் பேசவோ தங்களது கருத்துக்களை வெளியிடவோ எந்தவொரு தடையுமில்லை. இதன் காரணமாக அனைவரின் பார்வையும் இந்தியாவின் பக்கம் திரும்பி வருகிறது.

வெளிநாடு வாழ் இந்தியர்கள் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றி வருகின்றனர்.

இதற்காக வெளிநாடுகளில் இந்திய தூதரகங்கள் மூலம் நல நிதி ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் அல்லலுறும் இந்தியர்களுக்கு உதவி செய்யப்பட்டு வருகிறது. (அ-2)

## ஜல்லிக்கட்டு வேடிக்கையில் 3 உயிர் பறிப்பு; 59 பேர் காயம்

(சிவகங்கை)

ஜல்லிக்கட்டு காளை மோதியதில் மூவர் உயிரிழந்ததுடன் மேலும் 59 பேர் வரை படுகாயமடைந்த சம்பவம் இந்திய சிவகங்கை மாவட்டத்தை கண்ணீரில் மூழ்கடித்துள்ளது.



சிவகங்கை மாவட்டம் கண்ட்ரா மாணிக்கம் கிராமத்தில் முத்து முருகையா கோவில் திருவிழாவை முன்னிட்டு சித்திராப் பௌர்ணமியில் நேற்று முன்தினம் மஞ்சு விரட்டு என்றழைக்கப்படும் மாட்டு வேடிக்கை ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டது.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் சுமார் 350 முரட்டுக் காளைகள் விடப்பட்டன.

சீறி வந்த காளைகளை போட்டியில் பங்கு கொண்ட வீரர்கள் அடக்கியுள்ளனர். இதன்போது தவறுதலாக காளைகள் பார்வையாளர்களைத் தாக்கின.

காளையின் தாக்குதலிற்கு இலக்காகி 3 பார்வையாளர்கள் உயிரிழந்ததுடன் 59 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தோரில் 7 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக கூறப்படும் அதேவேளை போதுமான பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பின் இவ் உயிரிழப்புக்களை தடுத்திருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-5)

## 68 இலங்கை அகதிகள் மங்களூரில் கைது

(மங்களூர்)

அவுஸ்திரேலியாவுக்கு தப்ப முயன்ற 68 இலங்கை அகதிகள் மங்களூரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கும்மிடிப்பூண்டி அகதி முகாமில் தங்கியிருந்த இலங்கை அகதிகள் 68 பேர் இங்கிருந்து வெளியேறி படகுகளில் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயன்றனர். இதற்காக அவர்கள் மங்களூரில் தங்கியிருந்தனர்.

இதன்போது பொலிஸார் அவர்களிடம் விசாரணை நடத்தியபோது அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயன்றது தெரிய வந்தது.

இதையடுத்து அவர்களை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்த நபர் உட்பட 4 ஏஜெண்டுகள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இராமநாதபுரம் மற்றும் திருவள்ளூரைச் சேர்ந்தவர்கள். பிடிப்பட்ட 68 தமிழ் அகதிகளும் மங்களூரில் உள்ள சமுதாய கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே கும்மிடிப்பூண்டி முகாமில் நேற்று முன்தினம் அதிகாரிகள் சரி பார்த்த போது 18 குடும்பங்களைச் சேர்ந்த 68 பேர் மாயமாகிவிட்டது தெரிய வந்தது.

இந்தநிலையில் கர்நாடகப் பொலிஸார் தந்த தகவலின் பேரில் கும்மிடிப்பூண்டி பொலிஸார் மங்களூர் சென்று 68 பேரையும் அழைத்து வந்தனர். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

~ கிரீஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கையும் கிழக்கையும் இணைக்க ரணில் சம்மதமா?

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போது யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து இங்கு தங்கியுள்ளார்.

அவர் தங்கியிருப்பதற்கான காரணம் என்ன என்பதை தமிழ் மக்கள் அறிந்திருப்பார்களாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிந்தும் அறியாமலும் உள்ளது.

கடந்த வருடம் மேதின நிகழ்வை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்காக ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டுச் சேர்ந்தார்.

மிகவும் இராஜதந்திரத்துடன் செயற்படுகின்ற ரணில் மேதின மேடையில் எந்விதமான தேவைப்பாடும் இல்லாத நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைக்கொண்டு சிங்கக் கொடியாகிய தேசியக் கொடியை மேடையில் நின்று தூக்கிப் பிடிக்கச் செய்தார்.

கூடவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நான் யாழ்ப்பாணத்தில் வைத்து சம்பந்தனைக் கொண்டு தேசியக் கொடியை தூக்கிப்பிடிக்க வைத்தேன். இதனை உங்களால் செய்ய முடியுமா? என்று கேள்வியும் எழுப்பியிருந்தார்.

எல்லாம் பேரினவாதத்தின் முன்திட்டமிடல். இத்திட்டமிடலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஒரு சிலர் உடந்தையென்பதை மறுப்பதற்கில்லை.

2012ஆம் ஆண்டு மே முதலாம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோளில் கை போட்டு யாழ்ப்பாணத்திற்கு வந்த ரணில்,

2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் தனது ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆள்சேர்க்க வந்துள்ளார்.

கடந்தவருடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டுச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களின் தோழமைக்கட்சி. ஆகையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் – தமிழரசுக் கட்சியில் இருப்பவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து அங்கத்துவத்தைப் பெறமுடியும் என்பது ரணிலின் நியாயப்படுத்துகை. எப்படியிருக்கிறது நிலைமை?

வடக்குக் கிழக்கு மாகாணசபையை இணைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ரணில், ஐ.நா. மனிதவுரிமை ஆணைக்குழுவில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்திற்குக் கடும் கண்டனம் விடுத்த ரணில்,

சந்திரிகா குமாரதுங்காவின் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அரசியல் தீர்வு நகலைப் பறித்து, பாராளுமன்றில் எரித்து தாண்டவம் ஆடிய ரணில், மன்னன் தசரதனின் குடும்பத்தையே நிர்மூலமாக்கிய சூத்திரதாரிபோல, ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தையே சிதலமாக்கிய ரணிலுடன் எந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நட்புக்கொள்கிறது.

எல்லாம் நாடகம் ; நடிப்பு. என்ன செய்வது எங்களை எங்களவர்களே ஏமாற்றினால் எங்களைச் சிங்களவர்கள் ஏமாற்றுவதில் என்ன வியப்பு இருக்கிறது?

# அமைச்சர் ஹக்கீம் கலந்து கொண்டதால் வெளியேறினார் சிவாஜிலிங்கம்!

## செல்வா சதுக்கத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 36-வது ஆண்டு நினைவு நிகழ்வில் அமைச்சர் ஹக்கீம் கலந்து கொண்டதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமாகிய எம்.கே. சிவாஜிலிங்கம் அந்நிகழ்விலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் தந்தை செல்வாவின் 36-வது ஆண்டு நினைவு நிகழ்வு தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நிதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நினைவுப் பேருரை நிகழ்த்தவென விழா ஏற்பாட்டு குழுவினரால் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அங்கு வந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளியேறினார்.

இதற்கான காரணத்தை அவரிடம் ஊடகவியலாளர்கள் கேட்ட போது,

இனப்படுகொலை செய்த மற்றும் மக்களின் காணிகளை அபகரிக்கும் அரசின் அமைச்சிலிருக்கும் ஒருவரினை தமிழ்த் தேசியத்திற்காகப் போராடிய மாபெரும் தியாகியின் நினைவுப் பேருரையினை நிகழ்த்த அழைத்தமை பெருந்தவறாகும்.

ரவூப் ஹக்கீம் முஸ்லிம் என்பதால் நான் எதிர்க்கவில்லை. தனிப்பட்ட ரீதியில் எனக்கு அவர் நல்ல நண்பரும் கூட. எனினும் இனப் படுகொலை செய்த அரசின் அமைச்சரவையிலுள்ள ஒருவரினை தந்தை செல்வாவின் நினைவுப் பேருரை நிகழ்த்த அழைத்தமை தவறாகும்.

எதிர்காலத்தில் இராணுவத் தளபதி, வட மாகாண ஆளுநர் எல்லோரையும் நினைவுப் பேருரை நிகழ்த்த கூப்பிடுவார்கள். தந்தை செல்வாவின் இலட்சியத்தினை விரும்புகின்ற ஒருவர்தான் நினைவுப் பேருரை நிகழ்த்த முடியும்.

எத்தனையோ பேராசிரியர்கள், சமய குருமார்கள் எனப் பலர் உள்ளனர். அவர்களினை அழைத்திருக்கலாம் என்றார் அவர்.

மேலும் இந்நிகழ்வில் அமைச்சர் ஹக்கீம் உரையாற்றிய போது தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை கடுமையாக விமர்சித்திருந்ததோடு அவர்களினை பாசிச அடக்குமுறைப் போராட்டக்காரர்களாக உருவகித்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-4)

# முஸ்லிம்களுக்கு பயந்தே பொது பல சேனா நிறுவப்பட்டது

## கிழக்கு பிரதி முதல்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் முஸ்லிம்களும் ஆயுதம் ஏந்தி போராடுபவர்கள் என்ற சந்தேகத்திலே பொது பல சேனா போன்ற அமுக்கக் குழுக்களை அரசாங்கம் நிறுவியுள்ளது என கிழக்கு மாகாண பிரதிமுதல்வர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் வைபவம் மட்டு ஏறாவூர் அறபா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் அரசாங்கத்துடன் முஸ்லிம் சமூகம் அந்நியொன்னியத்துடன் இருந்து வருகின்ற இந்த நிலை, அரசாங்கம் முஸ்லிம் சமூகத்தின் மீது கொண்டுள்ள இந்த சந்தேகம் மிக ஆபத்தானதாகும்.

இதனால் இந்த நாட்டில் இன முறுகல் ஏற்படக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன. இந்த முஸ்லிம் சமூகத்தின் மீது இவ்வாறான சந்தேகங்கள் ஏற்பட்டால் அரசாங்கம் நேரடியாக முஸ்லிம் சமூக தலைவர்கள் மற்றும் உலமாக்களிடம் கேட்டு சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ளலாம்.

அரசாங்கத்துக்கு ஏற்பட்ட இவ்வாறான சந்தேகங்களுக்கு முஸ்லிம் தலை வர்கள், உல மாக்கள் தெளிவான பதில்களைக் கொடுக்க வேண்டும் அவ்வாறு தெளிவுபடுத்துவதனால் அரசின் சந்தே கங்களை உடனுக்குடன் திருத்திக் கொள்ள முடியும்.

இந்தநாட்டில்முஸ்லிம்கள்சம்பந்தமாக எழுகின்ற சந்தேகங்களுக்கு முஸ்லிம் சமூகம்அதற்கானபதிலைவழங்கபின்நிற்க கூடாதென குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## வரி வருமானத்தை அதிகரிக்க பரிந்துரை

(கொழும்பு)

வரி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். வரி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் வரி வருமான த்தை அதிகரித்துக்கொள்வது தொடர்பில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இம்முறை மேதினக்கூட்டத்தில் வரி வருமானம் அதிகரிப்பது குறித்து யோசனைகள் வலியுறுத்தப்படும்.

கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் வரி வருமானத்தை அறவீடு செய்ய முடியும்.

நாட்டில் பல்வேறு விதமான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின் றன.

இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களின் போது ஒருவீத வரியை அறவீடு செய்ய முடியும் என்பதே எமது பரிந்துரை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



நான் ஸ்ரீ மூர்த்தியில் இருக்கிறேன். நான் ஸ்ரீ மூர்த்தியில் உயிர்த்திருக்கிறேன் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். அது வெறும் படமல்ல. சில சமயங்களில் நீங்கள் ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டால் ஸ்ரீமூர்த்தியில் இருந்து இரத்தம் கசியக் கூடும். அது ஒரு உயிருடன் இருக்கும் படம். அதற்கு ஜீவன் உள்ளது. சில ஸ்ரீமூர்த்திகள் கண்ணீர் சிந்தவும் சிரிக்கவும் கூடச் செய்யும். உங்கள் ஸ்ரீமூர்த்தி பகவான் உங்களைச் சார்ந்த தனிப்பட்ட குணாதிசயத்துடனும் மற்றவருடைய பகவான் வேறுவிதமான குணங்களுடனும் இருப்பார்கள். ஒவ்வாரு பகவானும் ஏனைய பகவானுடன் பேசிக்கொள்வார்கள். சில நேரங்களில் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை நீங்கள் கேட்கவும் முடியும். அதில் உயிரோட்டம் உள்ளதால்தான் பகவான் இருப்பதை அந்தளவிற்கு உங்களால் உணரமுடிகிறது. சில ஸ்ரீ மூர்த்திகள் கவனிப்பாரற்று இருக்கலாம். அவற்றில் உயிரோட்டம் இருக்காது.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### வாழ்க்கையின் இரகசியம்



- உடல் மனம் அறிவு மூன்றையும் பலவீனமாக்கும் எதையும் நஞ்சென்று ஒதுக்கி விடுங்கள்.
- வஞ்சனையால் எதையும் உலகில் சாதிக்க இயலாது. அன்பும் உண்மையும் இருந்தால் பெரிய செயலைக் கூட எளிதாக செய்து விடலாம்.
- இந்த பரந்த உலகில் பிறந்திருக்கும் நீங்கள் அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லாவிட்டால் உங்களுக்கும் சிறு கல்லுக்கும் கூட வித்தியாசம் இல்லாமல் போய் விடும்.
- பயனின்மையே வாழ்க்கையின் இரகசியம். பிறரிடம் இருந்து வரும் உதவியை ஏற்க மறுக்கின்ற அந்தக் கணமே நமக்கு சுதந்திரம் கிடைத்து விடும்.
- நியாயமான கோபம் என்ற ஒன்று எங்கும் கிடையாது. ஏனெனில் அனைத்தையும் சமமாகக் காணத்தவறுவதால் தான் ஒருவருக்கு கோபமே உண்டாகிறது.
- எண்ணங்களுக்கு நாம் உரிமை உடையவர்கள். நல்ல எண்ணங்கள் நம்மை நோக்கி வருவதற்காக நமது உள்ளங்களைத் திறந்து வைக்க வேண்டியது நம் கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PEPSI IPL 6 இதுவரை...

34 ஆட்டங்கள்

| | |
|---|---|
| மொத்த ஓட்டங்கள் **9899** | வீழ்த்தப்பட்ட விக்கெட்டுகள் **423** |
| பறந்த சிக்ஸஸர்கள் **270** | விளாசப்பட்ட பவுண்டரிகள் **1312** |
| பெறப்பட்ட சதங்கள் **2** | கிடைத்த அரைச் சதங்கள் **40** |
| வேகமான பந்துவீச்சு **153.43 KPH** | ஓட்டமில்லாத பந்துவீச்சுகள் **3,036** |

## இன்றைய ஆட்டங்கள்

மாலை 4 மணி

RAJASTHAN ROYALS Vs SUNRISERS

இரவு 8 மணி

MUMBAI INDIANS Vs ROYAL CHALLENGERS BANGALORE

## ஐ.பி.எல்.அணிகள் பெற்ற புள்ளிகள்

IPL - 2013

| Teams | Mat | Won | Lost | Tied | Pts | Net RR |
|---|---|---|---|---|---|---|
| Bangalore | 8 | 6 | 2 | 0 | 12 | +1.25 |
| Chennai | 8 | 6 | 2 | 0 | 12 | +0.59 |
| Hyderabad | 8 | 5 | 3 | 0 | 10 | -0.11 |
| Rajasthan | 7 | 4 | 3 | 0 | 8 | +0.59 |
| Punjab | 7 | 4 | 3 | 0 | 8 | +0.34 |
| Mumbai | 7 | 4 | 3 | 0 | 8 | -0.14 |
| Kolkata | 7 | 2 | 5 | 0 | 4 | -0.01 |
| Pune | 8 | 2 | 6 | 0 | 4 | -1.47 |
| Delhi | 8 | 1 | 7 | 0 | 2 | -0.95 |

நேற்றைய இரவு ஆட்டம் உள்ளடக்கப்படவில்லை

### அதிக ஓட்டங்கள்

1. கிறிஸ் கெய்ல் – 432
 பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸ்
2. மைக்கல் ஹசி – 350
 சென்னை சுப்பர் கிங்ஸ்
3. விராட் கோலி – 333
 பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸ்

### அதிக சிக்ஸர்கள்

1. கிறிஸ் கெய்ல் – 34
 பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸ்
2. ரோகித் சர்மா – 17
 மும்பை இந்தியன்ஸ்
3. விராட் கோலி – 12
 பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸ்

### ஒரு போட்டியில் ஆகக் கூடுதலான ஓட்டம்

1. கிறிஸ் கெய்ல் – 175*
 பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸ்
2. ஷேன் வொட்சன் – 101
 ராஜஸ்தான் ரோயல்ஸ்
2. விரேந்திர சேவாக் – 95*
 டில்லி டேர்டேவில்ஸ்


### அதிக விக்கெட்டுக்கள்

1. சுனில் நரைன் – 14
 கொல்கத்தா நைட் றைடர்ஸ்
2. அமிற் மிஸ்ரா – 14
 சன் ரைஸர்ஸ்
3. ட்வெயின் பிராவோ – 14
 சென்னை சுப்பர் கிங்ஸ்

### சிறந்த பந்துவீச்சு

1. சுனில் நரைன் – 4/13
 கொல்கத்தா நைட் றைடர்ஸ்
2. அமிற் மிஸ்ரா – 4/19
 சன் ரைஸர்ஸ்
3. உமேஸ் யாதேவ் – 4/24
 டில்லி டேர்டேவில்ஸ்

## 'என்னைப் போன்று கோலி ஆடுகிறார்' - விவியன் ரிச்சர்ட்ஸ்



இந்திய துடுப்பாட்ட வீரர் விராட் கோலி, எனது துடுப்பாட்டத்தை எனக்கு நினைவுபடுத்துகிறார் என்று மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் ஜாம்பவான் விவியன் ரிச்சர்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியது: விராட் கோலி துடுப்பெடுத்தாடும்போது அதைப பார்த்து ரசிப்பதை நான் விரும்புகிறேன். அவர் என்னைப் போன்றே காணப்படுகிறார. அவருடைய ஆக்ரோஷத்தையும், உணர்ச்சி வசப்படும் குணத்தையும் நான் விரும்புகிறேன். அவரைப் போன்றுதான் நானும் ஆக்ரோஷமிக்கவனாக இருந்தேன். அவர் என்னை எனக்கு நினைவுபடுத்துகிறார்.

அவர் பின்வாங்காது எதிர்த்து நிற்கக் கூடியவர். நெருக்கடிக்கு மத்தியிலும் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கக்கூடியவர். இதுபோன்ற உள்ளுணர்வு விடயங்களை நீங்கள் மற்றவர்களுக்கு கற்பிக்க முடியாது.

களத்தடுப்பிலும் என்னைப் போன்றே கோலி செயற்படுகிறார். கோட்டைவிடும் களத்தடுப்பாளராக அல்லாமல், உயிர்ப்புள்ள வீரராக செயல்படுகிறார் என்றார்.

## கிரி.சபையை விமர்சிக்கிறார் சமரவீர



இலங்கையில் கிரிக்கெட்டைக் கொண்டு நடாத்தும் விதம் தொடர்பாக இலங்கைக் கிரிக்கெட் சபை மீது திலான் சமரவீர தனது விமர்சனங்களை முன்வைத்துள்ளார். அத்தோடு இலங்கையில் கிரிக்கெட்டின் எதிர்காலம் தொடர்பாக அச்சமடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் சபை அண்மைக் காலமாக டெஸ்ட் போட்டிகளைத் தவிர்த்து, ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளிலும், ரி-20 சர்வதேசப் போட்டிகளிலும் தனது கவனத்தைச் செலுத்தி வரும் நிலையில், அது தொடர்பாக திலான் சமரவீர தனது விமர்சனங்களை முன்வைத்தார்.

இலங்கை அணி 2013ஆம் ஆண்டில் 6 டெஸ்ட் போட்டிகளை அவ்வாறு இழந்தது எனக் குறிப்பிட்ட திலான் சமரவீர, இதன் காரணமாக இலங்கையின் கிரிக்கெட் எதிர்காலம் குறித்து அச்சமடைவதாகத் தெரிவித்தார்.

ஏனைய நாடுகளில் 12 ஆண்டுகள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றினால் 100 டெஸ்ட் போட்டிகளுக்கு மேல் விளையாட முடியுமெனத் தெரிவித்த திலான் சமரவீர, இலங்கையில் 75 போட்டிகளில் தான் விளையாட முடியுமெனத் தெரிவித்தார்.

இலங்கையின் முதற்தரப் போட்டிக் கட்டமைப்பும் தவறானது எனக் குறிப்பிட்ட திலான் சமரவீர, முதற்தரப் போட்டிகளில் 20 அணிகள் பங்குபற்றுவதாகவும், 20 என்பது அதிகமானதெனக் கருதுவதாகத் தெரிவித்த அவர், அவ்வெண்ணிக்கை ஆறாக இருக்க வேண்டுமெனவும், அதிகபட்சமாக 7 அல்லது எட்டாக மாத்திரமே இருக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

சிறிய வயதில் மாணவர்கள் டுவென்டி டுவென்டி போட்டிகளில் பங்குபற்றுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்த திலான் சமரவீர, அது வீரர்களின் கிரிக்கெட் நுட்பத்தை இல்லாது செய்வதாகவும் தெரிவித்ததோடு, 19 வயதிற்குள் அவர்கள் ரி-20போட்டிகளில் பங்குபற்றுவதைத் தடை செய்ய வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

## 'போராடி வென்றோம்' - ரோகித்சர்மா

ஐ.பி.எல். போட்டியில் 33ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ்- கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் மோதின. இதில் ஒருபந்து எஞ்சி இருந்த நிலையில் மும்பை இந்தியன்ஸ் 5 விக்கெட்டில் வென்று 4ஆவது வெற்றியை பெற்றது.

இந்த ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ரோகித்சர்மா தலைவராக பணியாற்றினார். இந்த வெற்றி குறித்து மும்பை இந்தியன்ஸ் தலைவர் ரோகித்சர்மா கூறியதாவது:-

அணித் தலைவர் பதவியின் தொடக்கம் சிறப்பாகவும் இருந்தது மகிழ்ச்சியாகவும் இருந்தது. போராடி வெற்றி பெற்றோம். சுமித்தின் ஆட்டம் அபாரமாக இருந்தது. தலைமைப் பதவியில் முதல் ஆட்டம் என்பதால் கொஞ்சம் நெருக்கடி இருந்தது.

பொன்டிங் தானாக விருப்பப்பட்டு இந்தப் போட்டியில் ஆடவில்லை. அவரது இந்த அணுகு முறை அனைவர் நெஞ்சையும் கவர்ந்தது.' வெளிநாட்டு வீரர்கள் தேர்வு சரியான முறையில் இருப்பது அவசியமாகிறது.

இவ்வாறு கூறினார் மும்பை தற்காலிகத் தலைவர் ரோகித்சர்மா.

## வெளியேறினார் சாய்னா




இந்திய பூப்பந்தாட்ட போட்டியில் இந்தியாவின் சாய்னா நெவால் 2ஆவது சுற்றில் அதிர்ச்சி தோல்வி கண்டு போட்டியிலிருந்து வெளியேறினார்.

டில்லியில் நடைபெற்றுவரும் இப் போட்டியில் வியாழக்கிழமை நடைபெற்ற மகளிர் ஒற்றையர் 2ஆவது சுற்றில் போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் உ[illegible] 21-13, 20-22 [illegible] என்ற செட் கணக்கில் போட்டித் தரவரிசையில் [illegible] தோல்வி கண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகுருநாதன் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு ஆனந்தா கல்லூரிக்கும் இடையிலான சிவகுருநாதர் வெற்றிக் கிண்ணத்திற்கான 2ஆவது கிரிக்கெட் போட்டி நேற்றுக் காலை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

சிவஞான வைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசைகளைத் தொடர்ந்து விருந்தினர்கள் மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டனர். ஆரம்ப நிகழ்வில் ஆனந்தா கல்லூரி அதிபர் தமிழிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் சிங்களத்திலும் உரையாற்றியமை சிறப்பம்சமாகும்.

வீரர்கள் அறிமுகத்தைத் தொடர்ந்து நாணயச்சுழற்சி இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அணித் தலைவர் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனடிப்படையில் களமிறங்கிய ஆனந்தாக் கல்லூரி தமது முதல் இன்னிங்ஸுக்காக 50.2 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் லக்கன ஜெயசேகர 64 ஓட்டங்களையும், தானுக மதுசன் 49 ஓட்டங்களையும், சமோ ஹசன் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ். இந்துக் கல்லூரி சார்பாக அணித்தலைவர் வாமனன், மதுஷன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், சாரங்கன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 37 பந்துப் பரிமாற்றங்களை எதிர் கொண்டு 6 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களினைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக சஜீவன் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும், ஜஸ்மினன் 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் ஆனந்தாக் கல்லூரி அணி சார்பில் இசுறு குணசேகர, தரண ரவீந்து, டுஸ்மந்த திசநாயக்க ஆகியோர் தலா 2 இலக்குகள் வீதம் கைப்பற்றினர்.

போட்டியின் இடைநடுவே எதிர்கட்சித் தலைவர் ரணிலும் மைதானத்திற்கு வந்திருந்தார். போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் இன்றாகும். (23)

# பஞ்சாப்பை பந்தாடியது கொல்கத்தா





கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கெதிரான போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

6-வது ஐ.பி.எல்.தொடரின் 35-வது போட்டி கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸில் நேற்றிரவு 8 மணியளவில் நடைபெற்றது.

இதில் உள்ளூர் அணியான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியைச் சந்தித்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவ்வணி 20 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களை எடுத்தது.



துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் வோரா 31 அதிகபட்ச ஓட்டமாகப் பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் கொல்கத்தா அணி சார்பாக சிறப்பாக பந்துவீசிய கலிஸ் 4 ஓவர்களில் 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

150 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பிஸ்லாவின் சிறப்பான அரைச் சதத்தின் உதவியுடன் வெற்றியிலக்கை 18.2 ஓவர்களில் அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்டக்காரராக களமிறங்கிய பிஸ்லா ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும், இயன் மோர்கன் 42 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பஞ்சாப் அணியின் பந்துவீச்சில் அஸார் மஹமூத் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக கொல்கத்தாவின் ஜக்கலிஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# பொதுநலவாய மாநா...

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டைப் பொறுத்த வரையில் அம் மாநாடு எங்கு நடக்கும் என்பதை பொதுநலவாய உறுப்பு மாநாடுகளின் தலைவர்கள் தான் முடிப செய்வார்கள்.

அவர்கள் இதுகுறித்துஏற்கெனவே முடிபு செய்து விட்டார்கள். அந்த முடிபு தொடர்கிறது. இது குறித்து அமைச்சர்கள் மட்டத்தில் மீள் பரிசீலனை செய்ய முடியாது என்றும் அவர் கூறினார்.

ஆனால் ஏனைய விடயங்கள் தொடர்பாக விவாதித்தோம். அதில் இலங்கை குறித்தும் நாங்கள் விவாதித்தோம். ஆனால் அது குறித்து நாங்கள் வெளியே பகிரங்கமாக கூற முடியாது என திப்பு மோனி தெரிவித்துள்ளார்

23-வது பொதுநலவாய மாநாடு இலங்கையில் நவம்பர் மாதம் 15 முதல் 17 வரையான காலப்பகுதியில் நடக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை போருக்கு பிந்திய இலங்கையில் பல முன்னேற்றங்களை கண்டிருப்பதாக பொதுநலவாய அமைப்பின் செய[illegible] நாயகம் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

2013ம் ஆண்டு பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என்று பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்துவந்தனர். இந்த நிலையிலேயே தமது முடிபில் மாற்றமில்லை என்று பொதுநலவாய செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை பொதுநலவாய மாநாடு நடத்தப்படும் இடத்தை இலங்கையில் இருந்து மாற்றுமாறு [illegible] நலவாய [illegible] நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"**

பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான

**பயிற்சிப்பட்டறை**

இன்று 27.04.2013 சனிக்கிழமை (9.00-12.00)

இடம்: பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை -யாழ்ப்பாணம்.

தொடர்பு: 0777822014 www.cse.lk

# ஜப்பானிய போர்க் கப்பல்கள் இரண்டு கொழும்பில்

கொழும்பு துறைமுகத்தில் ஜப்பானின் இரண்டு போர்க் கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளதாக இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

கடற்கொள்ளையர்களைத் தடுக்கும் நோக்கில் சோமாலிய மற்றும் மத்தியதரைக் கடலில் கண்காணிப்பு மேற்கொள்ளும் கப்பல்களே இவ்வாறு கொழும்புக்கு வந்துள்ளன.

கப்பலுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிமித்தம் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளதாக இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

இக்கப்பலிலுள்ள ஜப்பான் கடற்படையினருக்கும் இலங்கை கடற்படையினருக்கும் இடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதுடன் நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டதாக இலங்கை கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அஹேபோனோ டிடி-108 என்ற கப்பலில் இரு ஹெலிகொப்டர்களை தரையிறக்கக்கூடிய வசதிகள் காணப்படுவதோடு, அதில் 190 கடற்படை அதிகாரிகள் பயணம் செய்கின்றனர்.

கமகிரி டிடி- 155 என்ற கப்பலும் ஹெலிகொப்டர்களை தரையிறக்கும் வசதிகளைக் கொண்டுள்ளதுடன் அதில் 220 கடற்படை அதிகாரிகள் பயணம் செய்ததாக இலங்கை கடற்படைத் தகவல்கள் குறிப்பிட்டன. (எ-6)

**தேவை**

யாழ்ப்பாணம், வன்னியில் இயங்கும் வைத்திய நிலையத்திற்கு ஆட்கள் தேவையாக உள்ளது.

☆ வைத்தியர் (MBBS, MD, RMO)

☆ தாதிமார்கள் (பெண்கள்)

தொடர்பு: 0777 750 391

(சி-3110)

**விற்பனைக்கு (கடை கட்டிடம்)**

கே.கே.எஸ். வீதி சுன்னாகம் சந்திக்கு அருகாமை சுன்னாகம் NDB வங்கிக்கு சற்று முன்பாக அமைந்துள்ள கடைக் கட்டிடம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0775632178

(2468)

தற்போது யாழ் நகரில்...




Leadind to BSc (Hons) from UK universities

- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




ISO 9001:2008 CERTIFIED

14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

Macro Ads

Building Careers - Transforming Lives

# போர்க் குற்றம் விசாரிக்க ...

செல்கிறது. அந்த காலத்தில் அமெரிக்காவின் கொன்சல் ஜெனரல் காலி கோட்டை விடுதியின் வரவேற்பறையில் இருந்தாராம். அவர் அங்கிருந்து அமெரிக்காவின் கப்பல்களுக்கான ஆட்சேர்ப்பு பணிகளை மேற்கொண்டார் எனக் கூறப்படுகிறது.

எனினும் தற்போது நாம் 21 ஆம் நூற்றாண்டில் உள்ளோம். அப்போதைய காலத்தைவிட அமெரிக்கா தூதரகத்தின் பணிகள் அதிகரித்துள்ளன. இலங்கையிடனான உறவுகள் அன்றைய காலத்தை விட மிகவும் ஆழமானதாக உள்ளது. இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளையும் சமூக மற்றும் கல்விக்கான உதவிகளையும் அமெரிக்கா வழங்கி வருகிறது.

விடுதலைப்புலிகளை சர்வதேச ரீதியாக தடைசெய்யும் வேலைத் திட்டத்தின் அதிகளவான பங்கினை அமெரிக்காவே வகித்தது. இந்த தடை காரணமாக விடுதலைப்புலிகளின் சர்வதே ரீதியான உதவிகள் கிடைக்கும் வலையமைப்பை முடக்கவும் அதனை முடிபுக்கு கொண்டு வரவும் முடிந்தது.

புலிகள் அமைப்பு இன்னும் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட அமைப்பாகும்.

பயங்கரவாத அமைப்புக்களுக்கு எதிராக தேசிய பாதுகாப்பை முன்னெடுத்துச் செல்லும் சவாலை நாம் அறிந்துள்ளோம். அதே போல் முக்கியமான விடயமாக சிரமமான சந்தர்ப்பங்களில் ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் முன்னெடுத்துச் செல்லும் சவாலும் மிகவும் முக்கியமானது.

ஜனநாயகத்தின் மதிப்பை பாதுகாப்பதன் ஊடாகவே இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நீண்டகால வலுவான இணைப்பு காணப்பட்டது. அவ்வாறான ஜனநாயக மதிப்புச் சவாலுக்கு உட்படும் போது அதற்காக அமெரிக்கா குரல் கொடுக்கும்.

ஊடகவியளர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்து அமெரிக்கா தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்கும் நாடாகும்.

முழு உலகத்திலும் கருத்து சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக அமெரிக்கா தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகிறது என்பதை எடுத்து கூறுவதற்காகவே இந்த சம்பவங்கள் குறித்து உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்தேன்.

பிரதிநிதித்துவ ஜனநாயகம் உள்ள நாட்டில் அரசாங்கம் ஒன்று செயற்படும் விதத்தையும் அதன் நிலைமைகளையும் அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உள்ளது. அத்துடன் அந்த உரிமைகளை பெற்றுக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு.

இது பிரஜைகளின் சட்டரீதியான மனித உரிமை எனவும் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# ஐ.தே.கவுக்கு ...

இணைந்துள்ளார். அவருக்கான கட்சி உறுப்புரிமையும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று யாழ்.பஸ் நிலையத்தில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் கட்சிக்கு புதிய உறுப்பினர்களை இணைக்கும் தீவிர நடவடிக்கையில் ரணில் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டிருந்தனர்.

பேருந்து நிலையத்திற்கு வந்திருந்தவர்களுடன் சென்று கலந்துரையாடியதோடு புதிய அங்கத்தவர்களுக்கான சிட்டைகளையும் வழங்கினர். அத்துடன் அப்பகுதி வர்த்தகர்களுடனும் கலந்துரையாடி இருந்தனர்.

எதிர்க் கட்சி தலைவர் உள்ளிட்ட அக்கட்சியினரை பார்க்கவென பலர் கூடி நின்றதை அவதானிக்க முடிந்தது. (எ-6)

**கார்ச் சாரதி: (நாளாந்த ஒப்பந்த அடிப்படை)**

40 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்; நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதியைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் 28.04.2013 மு.ப 10 மணிக்கு நேரில் வரவும். நாள் ஒன்றிற்கு 500 ரூபாய் வீதம் வழங்கப்படும்.

பொது முகாமையாளர்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(சி-3118)

**மானிப்பாய் ஆனைக்கோட்டையில் வைத்திய நிலையம்**

கஜமுகன் வைத்திய நிலையம்

04 ஆம் கட்டை (புக்கை தின்னி பிள்ளையார் கோயிலடி) யாழ்.றோட், ஆனைக்கோட்டை

**எமது சேவைகள்**

- ✔ சகலவிதமான நோய்களுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.
- ✔ குழந்தைகளுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.
- ✔ இரத்தம், சிறுநீர் (ஆய்வுகூட சேவைகள்) நவீன முறையில் செய்து கொடுக்கப்படும்.
- ✔ விடுமுறையில் செல்பவர்களுக்கான வைத்தியச் சான்றிதழ் வழங்கப்படும்.

ஆனைக்கோட்டை கூழாவடி

வைத்திய கலாநிதி சி.சிவானந்தராஜா (MBBS - SL)

**தினமும் பார்வையிடும் நேரங்கள்**

காலை 08.30 மணிமுதல் - 1.00 வரை

மாலை 04.30 மணிமுதல் - 8.30 வரை

**கஜமுகன் வைத்திய நிலையம்**

04 ஆம் கட்டை, (புக்கை தின்னி பிள்ளையார் கோயிலடி) யாழ்.றோட், ஆனைக்கோட்டை.

(சி-3109)

**டோஹா, கட்டாரில் (Doha,Qatar) உடனடி வேலைவாய்ப்பு**

பொறியியல், நிர்மாணத்துறையில் பிரசித்திபெற்ற நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் SLBFE அங்கிகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தினூடாக 30க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் அதி உயர் சம்பளத்துடன் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

மேசன் 1200 - 1500 எலக்ரீசியன் 1200 - 2000 பெயின்டர் 1200 - 1500 Plumber 1200 - 1500 கம்பி கூடுகட்டுபவர் - 1200 - 1500 காப்பென்டர்ஸ் 1200 - 1500 பொது உதவியாளர் 900 - 1000 லேபர் 900 - 1000 கிளினிங் லேபர் 800 - 1000 Mechanic 1200 - 2000 Mechanic Helper 1000 Driver (Valit License) 1500 - 2000 6 G Welder 1200 - 1500

மிக குறைந்த கட்டணத்தில் இரண்டே வாரத்தில் பயணமாகலாம். உங்கள் விண்ணப்பங்கள் பாஸ் போர்ட் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் எதிர் வரும் 27.04.2013 A9 வீதி, பரந்தன் ஸ்டார் ரெஸ்ட் இலும் 28ஆம் திகதி இல 33, ஆசீர்வாதம் லேன்ட் ஹொஸ்பிட்டல் வீதி, கிறின் கிறாஸ் ஹேட்டல்யாழ்ப்பாணத்திலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். (LL. No - 2490)

உடன் தொடர்புகளுக்கு : வவுனியாவில் T.P. : 0777 92 94 75, 077 23 93 165

தலைமை நிறுவனம் : Air Trust Overseas Manpower Consultant, 945, Maradana Road, Colombo - 8 011 2676777, 077 2393165

(C-3041)

**Deutsch, Dutch, French, English**

**2013 புதிய வகுப்புகள் விபரம்**

ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

**தொடர்பு: விவேகானந்தா அக்கடமி**

221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Tel: Hotline, 0774842464

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.